படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள் : பன்னிரெண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 தை 26 சனிக்கிழமை (09.02.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 75

# மன்னார் அடம்பனில் நேற்று 9 மணி நேரமாகக் கடும் சமர்!

## 1 கிலோ மீற்றரை கைப்பற்றிவிட்டோம்-படையினர்
## விரட்டி முறியடித்துவிட்டோம்-புலிகள்

கொழும்பு, பெப். 09

மன்னார் மாவட்டம், அடம்பன் தெற்கில் இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில், நேற்றுத் தொடர்ச்சியாக 9 மணி நேரம் கடும் சமர் இடம்பெற்றது.

நேற்றைய சமரில் அடம்பன் குளத்துக்குத் தெற்கே ஒரு கிலோ மீற்றர் தூரத்தை விடுதலைப் புலிகளிடம் இருந்து மீட்டு, அங்கு தாம் நிலைகொண்டிருப்பதாக படைத்தரப்பினர் நேற்று மாலை தெரிவித்தனர்.

ஆனால், பாலைக்குழியில் இருந்து அடம்பன் பகுதியை நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கு பலத்த இழப்பை ஏற்படுத்தி, அவர்களை விரட்டி தாக்குதல்களை முறியடித்து விட்டதாக விடுதலைப் புலிகள் நேற்றிரவு அறிவித்தனர்.

நேற்றுக்காலை 9மணியிலிருந்து மாலை 6 மணிவரை தொடர்ந்து நடைபெற்ற உக்கிர சண்டையில் 10 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், 20 பேர் காயம் அடைந்ததாகவும் புலிகள் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய தாக்குதலில் 12 விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டதாக இராணுவத்தினர் தெரிவித்தனர்.

மன்னார் பாலைக் குழியில் இருந்து அடம்பன் பகுதியை நோக்கி இராணுவத்தினர் நேற்றுக் காலை மேற்கொண்ட முன்னேற்ற முயற்சி, எதிர்த்தாக்குதலில் முறியடிக்கப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இராணுவத்தினருடன் நேற்றுக்காலை 9 மணிக்கு ஆரம்பமாகிய மோதல்கள் தொடர்ச்சியாக மாலை 6 மணிவரை கடுமையாக இடம்பெற்றதாகவும், அதில் 10 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதுடன், 20 பேர் காயமடைந்துள்ளதாகவும், இராணுவத்தினரிடமிருந்து ஆயுதத் தளபாடங்கள் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் விடுதலைப் புலிகள் மேலும் தெரிவித்தனர்.

மன்னார் மாவட்டத்தில் இராணுவ முன்னரங்கப் பகுதியில் நேற்றுக் காலை இராணுவத்தினர் மேற்கொண்ட முன்னேற்ற நடவடிக்கையின்போது சுமார் ஒரு கிலோ மீற்றர் நீளமுள்ள விடுதலைப் புலிகளின் முன்னரங்க பதுங்கு குழி வரிசையொன்றை இலங்கை இராணுவம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையினர்-புலிகள் தனங்களப்பில் மோதல்

கொழும்பு,பெப்.09

தனங்கிளப்பில் உள்ள கடற்கரையில் நேற்றுமுன்தினம் மாலை 6.45 மணியளவில் தாக்குதலுக்கு ஆயத்தமாகி நின்றதாகக் கூறப்படும் விடுதலைப் புலிகளின் படகு ஒன்றின் மீது படையினர் மேற்கொண்ட ஆட்லறித் தாக்குதலில் அந்தப் படகில் இருந்த நான்கு விடுதலைப் புலி உறுப்பினர்கள் உயிரிழந்ததுடன், அந்தப் படகும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்துக்கு புதிய படையணி 61ஆவது டிவிசன் உதயமாகிறது

கொழும்பு, பெப். 09

இலங்கை இராணுவம் தனது படை பலத்தை அதிகரிக்கும் நோக்குடன் மேலும் ஒரு புதிய படையணியை (டிவிஷனை) உருவாக்கத் திட்டமிட்டிருப்பதாக இராணுவ வட்டாரத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தற்போது இடம்பெற்றுவரும் யுத்தத்தில் இராணுவத்தின் பலத்தை அதிகரிக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் ஒருபோதும் பின்வாங்கமாட்டார்கள், அவர்களின் பகுதிகளைக் கைப்பற்றுவது சுலபமும் அல்ல

### புதுடில்லியில் சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

புதுடில்லி, பெப்.09

இலங்கையில் நடைபெறும் யுத்தத்தில் விடுதலைப் புலிகள் ஒருபோதும் பின்வாங்கமாட்டார்கள். அவர்களின் பகுதியைக் கைப்பற்றுவது சுலபம் அல்ல. கைப்பற்றினாலும் கூடத் தொடர்ந்து போராடுவார்கள். விடுதலைப் புலிகளின் போராட்டம் மக்கள் போராட்டமாகப் பரிணமித்துள்ளதே அதற்குக் காரணம்.

இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்.

புதுடில்லியில் இந்தோ - ஆசிய செய்திச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி சிங்கப்பூரில்

கொழும்பு, பெப். 09

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுக்காலை தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு சிங்கப்பூருக்குச் சென்றுள்ளார் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

சிங்கப்பூரில் சில நாள்கள் தங்கியிருந்த பின்னர் அவர் நாடு திரும்புவார் என்றும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

(சி)

## தமிழ் வர்த்தகர் கொழும்பில் நேற்றிரவு வீதியில் வைத்து சுட்டுக்கொலை; மனைவி காயம்

கொழும்பு, பெப். 09

கொழும்பு, கொட்டாஞ்சேனையில் பிரபல தமிழர் வர்த்தகர் ஒருவர் நேற்றிரவு 8.10 மணியளவில் அடையாளந் தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்.

யாழ்ப்பாணம், வேலணையைச் சேர்ந்தவரும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல வர்த்தகருமான வீரசுப்பிரமணியம் (வயது-54)என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

முகமாலை இராணுவ முகாமில் பகிடிவதை:

## 5 வருடங்களுக்குப் பின்னர் 17 பேர் பிணையில் செல்ல அனுமதி

முகமாலை இராணுவ முகாமில் இரு சிப்பாய்கள் பகிடிவதைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வழக்கில், கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 17 இராணுவத்தினரையும் பிணையில் செல்ல யாழ். மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 13ஆவது திருத்தம் அமுலாவதை ஊன்றி அவதானிக்கிறது இந்தியா

### புதுடில்லியில் ரணிலிடம் தெரிவிப்பு

கொழும்பு,பெப்ரவரி 09

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இடைக்கால நடவடிக்கையாக அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை அமுல் செய்யப் போவதாக அறிவித்திருக்கும் இலங்கை அரசு, அதனை எப்படி - எந்த அளவுக்கு - நடைமுறைப்படுத்த விழைகின்றது என்பதை இந்தியா ஊன்றிக் கவனிக்கும்.

- இவ்வாறு இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் புது

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை பேராறில் மோதல் சம்பவம்

கொழும்பு,பெப்.09

திருகோணமலை பேராறு காட்டுப் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Hatton National Bank

## ஹற்றன் நஷனல் வங்கி

### அடகு நகைகள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, மானிப்பாய் மற்றும் ஸ்ரான்லி வீதி வாடிக்கையாளர் சேவை நிலையங்களில் 30.12.2006 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கயைாளர்களின் அடகுப் பொருள்கள் 16.02.2007 சனிக்கிழமை காலை 9 மணிக்கு இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ். கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருள்களை உடனே மீட்க முடியாவிட்டால்

* கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூ. 500) செலுத்தி அல்லது
* தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருள்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.



## பதவி வெற்றிடம்

எமது நிறுவத்தினால் மேற்கொள்ளப்படவிருக்கும் வேலைத்திட்டத்திற்கு கீழ்வரும் தகுதியுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ விஞ்ஞானப் பட்டதாரி(இரசாயனம்)

★ விஞ்ஞானப் பட்டதாரி( விவசாயம்)

விவசாயத் திணைக்களத்தில் வேலை செய்த அனுபவமுள்ளவரும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்.

**கிளீன் வெல்(த-து) வ-து**

866, பருத்தித்துறை வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் கல்விசாராப் பணியாளராக கடமையாற்றிய

### கோவிந்தபிள்ளை புவனேஸ்வரன்

07.02.2008 அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைவதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய சகோதரத்துவம்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
(000)

## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்கள சிரேஷ்ட பொறியியல் உதவியாளர் தி.சிவானந்தன் அவர்களின் பாசமிகு தந்தையார்

### சரவணமுத்து தில்லையம்பலம்

(இளைப்பாறிய தபாலதிபர்)

அவர்கள் 08.02.2008 அன்று சிவபதமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைவதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கமநல சேவைகள் சமூகம்
யாழ்.மாவட்டம்.
(70978)

## கண்ணீர் அஞ்சலி

கல்வி அமைச்சின் மொழி பெயர்ப்புப் பிரிவில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் க.ஜீவகுமாரின் அன்புத் தந்தை

### வீரசிங்கம் கதிரிப்பிள்ளை

அவர்கள் 07.02.2008 வியாழக்கிழமை வல்வெட்டி உடுப்பிட்டியில் காலமான செய்தி அறிந்து துயருறுவதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சக ஊழியர்கள், கல்வி அமைச்சு,
இசுருபாய, பத்தரமுல்ல.
(அ/551404)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



சைவப்புலவர், கலைவாரிதி
அமரர்

### அரியகுட்டி சுப்பிரமணியம்.J.P

(ஓய்வுபெற்ற சாரண ஆசிரியர்)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 29.11.1940 | 10.01.2008 |

*கல்வியின் சிகரமே, கலைகளின் கலங்கரை விளக்கே*
*கார்மோனியத்தின் கலைமணியே, காவடி, கரகத்தின் வித்தகனே*
*பண்ணிசையுடன் பாங்கான பண்பை வளர்த்திட்ட பாவலனே*
*புன்னகை பூத்த உன் முகம் என்றும் மறையாது எம் நெஞ்சில்.*

கடந்த 10.01.2008 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோர், தொலைபேசி, தந்தி மூலம் துக்கம் பகிர்ந்தோர், அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் தம் ஆதங்கத்தை வெளிப்படுதியோர் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் நல்கியோர் யாபேருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (09.02.2008) சனிக்கிழமை திருகோணமலையிலும் மூளாயிலும் நடைபெறும்.

*மூளாய், சுழிபுரம்.* (70980) குடும்பத்தினர்.

## திருவாசக முற்றோதல்

சிவபூமியினர் நடத்தும் முதியோர் இல் லத்தில் மாதம் தோறும் திருவாசகம் முற்றும் ஓதுதல் ஒவ்வோர் மாத கடைசி ஞாயிறு தினத்தில் நடைபெற்று வருகின்றது. இம் மாத நிகழ்வு நாளை ஞாயிறு காலை 7.30 மணி முதல் நடைபெறவுள்ளது. முதியோர் இல்லத்தில் தங்கியுள்ளவர்களுடன் மற்றும் பலர் கலந்து கொள்வர். (1-29)

## கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.9

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இராமநாதன் கல்லூரி வளாகத்தில் உள்ள யூனியன் கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (1-203)

## இராமநாதன் நுண்கலை மீள் பரீட்சைகள்

யாழ்.பல்கலைக்கழகக் கலைப் பீடத்தின் இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் முதலாம், இரண்டாம் அரையாண்டுக்கான மீள் பரீட்சைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெற விருக்கின்றன. சிரேஸ்ட உதவிப் பதிவாளர் (பரீட்சைகள்) இதனைத் தெரிவித்தார். (01)

## மலர் வெளியீடு

சுழிபுரம், பெப்.9

சுழிபுரம் சிவன் ஆலயத்தில் அமரர் அன்னை வி. பூமாதேவி ஓராண்டு நினைவாக விசேட அபிஷேக ஆராதனையும் மலர் வெளியீடும் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளன. மலர் வெளியீட்டு விழாவுக்கு சிவஸ்ரீ. சி. பிறைசூடிக் குருக்கள் தலைமை வகிப்பார். ஆசியுரை சிவஸ்ரீ. சு. சுந்தரராசக் குருக்கள் வழங்குவார். பிரதம விருந்தினராக நாராயணதாசன் கு. பொ. சிவகுருநாதனும் சிறப்பு விருந்தினராக அன்னைதாசன் க. ஆனந்தராசாவும் கலந்து கொள்வர். (1-28)

## அழகொல்லையில் கும்பாபிஷேகம்

அளவெட்டி அழகொல்லை வல்லவாம்பா சமேத விநாயகர் ஆலய இராஜ கோபுரம் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கான மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை காலை 6 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம் பெறும். (203)




யாழ்ப்பாணம்,பெப்.9

இணுவில் சிவகாமி அம்பாள் ஆலய வருடாந்த மாசிமக லட்சார்ச்சனை நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. (203)

* * *

உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையார் ஆலய இராஜ கோபுரத்திற்கு அடிக்கல் நடும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

* * *

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் மாசிமக இலட்சார்ச்சனை நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாக விருக்கின்றது.

இம்மாதம் 20 [illegible] கதி இலட்சார்ச்சனை பூர்த்தி [illegible]வும் மறுநாள் மாசிமகம் பெருவிழாவும் இடம்பெறவுள்ளன.

* * *

யாழ்ப்பாணம்,பெப்.9

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலய மணவாளக்கோலத் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

காலை 9 மணிக்கு 1008 சங்காபிஷேக [illegible] பெறும். (202-224)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நீச் கிலாப்பிள்ளை மொனிக்கம்மா



ஊர்காவற்றுறை, கரம்பொன் கிழக்கைப் பிறப்பிடமாகவும், 16/3, கச்சேரி - நல்லூர் றோட், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நீக்கிலாப்பிள்ளை மொனிக்கம்மா நேற்று (08.02.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நீக்கிலாப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அன்ரனி பெர்னாண்டோ - றோசம்மா தம்பதியினரின் அன்பு மகளும் சங்கைக்குரிய சகோதரி செறவின் அவர்களின் அன்புச் சகோதரியும் லில்லிபிறிடா, மேரியசிந்தா (மன்னார்), அகஸ்ரின் (கொழும்பு), கிறேஸ், லூயிஸ் மரியநாயகம் (Alliance Francaise ஊழியர்), நோயல் (கட்டார்), விஜயா ஆகியோரின் அன்புத் தாயாரும், மரியஸ்ரான்லி, ரஞ்சன், ரஞ்சினி, கிறிஸ்ரி வரதராஜன், சாந்தி, நீற்ரா, யேசுதாசன் ஆகியோரின் அன்பு மாமியும், ஜெயதரன் (கிராம அலுவலர், ஊர்காவற்றுறை) அவர்களின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று (09.02.2008) சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*16/3, கச்சேரி நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (70977)

தகவல்:
ம.றெக்னோ ஜெயதரன்
(கிராம அலுவலர், ஊர்காவற்றுறை).

### கோவிந்தபிள்ளை புவனேஸ்வரன்



(யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

கல்லூரி ஒழுங்கை, சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கோவிந்தபிள்ளை புவனேஸ்வரன் 07.2.2008 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சங்கத்தானையைச் சேர்ந்த கோவிந்தபிள்ளை - தங்கம்மா தம்பதிகளின் மூத்த மகனும் தில்லைநாயகியின் அன்புக் கணவரும் பிரியதர்சினியின் பாசமிகு தந்தையும் மல்லிகாதேவி (ஆசிரியை, யா/கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி), விஜயலட்சுமி, சிவராஜா, சக்திவேல் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பரிபூரணானந்தன், மாலினி, உமா ஆகியோரின் மைத்துனரும் நிசாந்தனின் (யா/ஹாட்லிக் கல்லூரி ) பாசமிகு மாமனாரும் நிலக்ஷினி, டில்சான், விதூசன், பிந்திகா, யதுசன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (9.2.2008) சனிக்கிழமை காலை 10 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொற்புலவு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கல்லூரி ஒழுங்கை,*
*சங்கத்தானை,*
*சாவகச்சேரி.* (70979)

தகவல்:
குடும்பத்தினர்.

### இராசையா வள்ளிப்பிள்ளை



ஒட்டுவெளி, மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், பொந்தி வீதி, பண்டத்தரிப்பை தற்போதைய முகவரியாகவும் கொண்ட இராசையா வள்ளிப்பிள்ளை நேற்று (08.02.2008) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் அமரர் இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முருகேசு, தங்கம்மா, இராசம்மா ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் நல்லம்மா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற தெய்வானை மற்றும் விநாயகமூர்த்தி, புஸ்பவதி, கனகம்மா ஆகியோரின் பெரிய தாயும் சுப்பிரமணியம், பொன்னம்பலம், புவனேஸ்வரி, அன்னம், காலஞ் சென்ற நாகலெட்சுமி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று(09.02.2008) சனிக்கிழமை மு.ப.11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பொந்தி வீதி,*
*பண்டத்தரிப்பு.* (70984)

தகவல்:
குடும்பத்தினர்.

### சரவணமுத்து தில்லையம்பலம்



(இளைப்பாறிய உபதபாலதிபர், மீசாலை)

மீசாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து தில்லையம்பலம் நேற்று (08.02.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து-பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும் சிவானந்தன்(கமநல அபிவிருதித் திணைக்களம், யாழ்ப்பாணம்), சரவணமுத்து ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வரஜனி, வசந்தராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் அஜந்தினி, திருவரங்கன், அனுஷா, நிலானி, ஜனகன், நிலக்ஷி, ஜாமளன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2008) பிற்பகல் 2 மணிக்கு மீசாலை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொற்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை மேற்கு,*
*மீசாலை.*

தகவல்:
தி.சிவானந்தன்,
தி.சரவணமுத்து
(மகன்மார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வல்வெட்டித்துறை றோ.க.த.க.பாடசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.
நிகழ்வின் பிரதம விருந்தினரான யுனிசெவ் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பிலிப் டுவாமெல்லே மற்றும் விருந்தினர்களான யாழ்.அரச அதிபர் கே.கணேஸ், உலக உணவுத்திட்ட யாழ். மாவட்டப் பிரதிநிதி ஜனாப் முகமட் சாலிகின் ஆகியோர் வரவேற்கப்படுவதை முதலாவது படத்திலும் - பிரதமவிருந்தினர் கட்டடத்தை நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் அருகில் பாடசாலை அதிபர் ஆ. முத்தையா நிற்பதையும் இரண்டாவது படத்திலும் - நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்களையும், மாணவர்களையும் மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்: சுந்தர்)

## உள்ளூராட்சித் திணைக்களங்களின் ஆளணித் தரவுகள் சேகரிப்பு

யாழ்ப்பாணம், பெப்.9

வடமாகாண உள்ளூராட்சி திணைக்கள அலுவல்கள், உள்ளூராட்சி சபைகள் ஆகியவற்றில் தற்போதுள்ள ஆளணி தொடர்பான தரவுத்தளம் மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் பேணப்படவுள்ளது.

இந்த அலுவலகங்களில் தற்போதுள்ள ஆளணி விவரங்களை (நிரந்தரம், அமைய, தற்காலிக) சுயவிவரக் கோவையினூடாக பார்வையிட்டு உடனடியாக அனுப்பி வைக்குமாறு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எவ்.ஜோன்சன், சகல உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், உள்ளூராட்சி சபைச் செயலாளர்கள் ஆகியோரைக் கேட்டுள்ளார். (202)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், பெப்.9

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 7,11 ஆகிய வகுப்புக்களில் நடனபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய கல்விச் சீர்திருத்தச் செயலமர்வு எதிர்வரும் 16ஆம் திகதி சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறுமென வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்தார். (202-207)

## லயன்ஸ் கழகத்தின் கணனிப் பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம், பெப்.9

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் கணனிப் பயிற்சி வகுப்புகள் நாளை ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகவுள்ளன.

இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விண்ணப்பித்தவர்கள் தமது பிறப்புச் சான்றிதழ், கல்வித் தகைமைச் சான்றிதழ், வதிவிட சான்றிதழ் ஆகியவற்றுடன் இன்று காலை 9.30 மணிக்கு சங்கத்தானையில் உள்ள் கழகத்தின் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு வருகை தருமாறு கழகத்தலைவர் லயன் இ.ஜெயபாலன் கேட்டுள்ளார். (202-207)

## கல்வியியல் கல்லூரியில் விஞ்ஞானக் கற்கைக்கு எட்டுப் பேர் தெரிவு

யாழ்ப்பாணம், பெப்.9

யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியில் விஞ்ஞானப் (ஆங்கில மொழி மூலம்) பாடநெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட மேலும் 8 பேரின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரம் வருமாறு:

பி. ஜீவகி(கைதடி), எஸ். காஞ்சனா (எழுதுமட்டுவாள்), ஜி. தர்சிகா (கொடிகாமம்), கே. சுபாதினி (மானிப்பாய்), கே. கீதா (அல்வாய்), ஜே. சுவேதனா (நல்லூர்), எஸ். சந்திரமதி (மானிப்பாய்), பி. சோலலக்சுமி (சுழிபுரம்). (202)

# கல்வியியலாளர் சேவை தரம் III இற்கு 324 பேருக்கு நியமனம் வழங்கப்படும்

இலங்கை கல்வியியலாளர் சேவை தரம் III பதவி நியமனம் 324 பேருக்கு வழங்கப்படவுள்ளது.

கடந்த வருடம் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையின் முடிவின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 324 பேருக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது.

கல்வியியலாளர் சேவை நேர்முகப் பரீட்சைக்கு ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் தோற்றியிருந்தனர். இவர்களுக்கான நேர்முகப்பரீட்சைகள் கடந்த வருடம் முற்பகுதியில் மத்திய கல்வி அமைச்சில் நடைபெற்றது.

கல்வியியலாளர் சேவை தரம் III பதவி ஆளணியில் 750 வகையிலான வெற்றிடங்கள் இருந்த போதிலும் திறைசேரி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் 324 பேருக்கு நியமனம் வழங்கப்படவிருப்பதாகவும்-

இந்த நியமனங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளைபொதுச்சேவை ஆணைக்குழு மேற்கொண்டு வருவதாகவும் அறியப்படுகின்றது. (202-11)

# பொதுமுகாமைத்துவ உதவியாளர் பதவி நேர்முகப் பரீட்சைக்கு 27 பேருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், பெப்.9

அரச பொது முகாமைத்துவ உதவியாளர் தரம் III பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சைக்கு யாழ். மாவட்டத்திலிருந்து 27 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 13 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரம் வருமாறு:

பி.ஜெயசுகன் (கொக்குவில் கிழக்கு), எம்.விநோதா (உரும்பிராய்), ஏ.சியாமளா (சுன்னாகம்), ஆர். ரஜீந்தினி (சண்டிலிப்பாய்), ஏ.அன்பயசீலன் (புத்தூர்), பி.கௌரி மனோகரி (பருத்தித்துறை), பி.முகுந்தன் (வவுனியா), கே.சுகிர்தா (கோப்பாய்), எஸ். பாரதி (வேலணை - 5), எஸ்.பவித்திரா (இணுவில்),

எஸ்.ஜே.ஸ்ரலின் (யாழ்ப்பாணம்), ரி.இந்திரஜித் (உரும்பிராய் மேற்கு), எஸ். சிவப்பிரியா (கொக்குவில் தெற்கு), எம். சசிதரக்குருக்கள் (நல்லூர்), ரி.கௌசலா (சுண்டுக்குளி), கே.தேவகி (சுன்னாகம்), எம்.குமுதா (கரவெட்டி), எஸ்.திலீபன் (கரவெட்டி), கே.சஞ்சீவன் (சாவகச்சேரி), ஜே.சாருமதி (யாழ்ப்பாணம்),

எஸ்.குமுதினி (சுழிபுரம்), எஸ்.ஜெனிற்றா (நல்லூர்), எம்.சோபனா (கைதடி), கே.அனோஜன் (கோண்டாவில்), ஜி.டயாளன் (பருத்தித்துறை), எஸ்.கவிதா (பருத்தித்துறை), எஸ்.தர்சினி (பருத்தித்துறை). (202)

# கடமைக்குப் பிந்திவரும் உள்ளூராட்சி அலுவலர்களுக்கு தாபன விதிக் கோவைக்கு அமைய நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப்.9

உள்ளூராட்சி மன்றங்களில் உரிய நேரத்தில் கடமைக்கு வரத் தவறும் அலுவலர்கள் மீது தாபன விதிக்கோவைக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சகல உள்ளூராட்சி சபை செயலாளர்களுக்கும் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபை அலுவலகங்கள் நாளாந்த கடமைகளுக்காக உரிய நேரத்தில் (காலை 8.30 மணி) திறக்கப்படுவதில்லை என முறைப்பாடுகள் கிடைத்ததையடுத்து உள்ளூராட்சி ஆணையாளர் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

இந்த நிலைமையானது பொது மக்களுக்கான சேவைகள் உரிய காலத்தில் வழங்குவதற்குத் தடையாக உள்ளதைச் சுட்டிக் காட்டியதுடன் உள்ளூராட்சி அலுவலகங்கள், உப அலுவலகங்கள், நூலகங்கள் போன்றவை உரிய காலத்தில் திறப்பதனையும், உத்தியோகத்தர்கள் உரிய நேரத்தில் சமூகமளிப்பதனையும் உறுதிப்படுத்திக் கொள்வதுடன், பிந்திவரும் நேரங்களில் குறுகியகால லீவுப் பதிவேடுகளில் பதிந்து வருவதனையும் நடைமுறைப் படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன் மூன்று நாள்கள் உரிய கடமை நேரத்தில் வராது பிந்திவரும் சந்தர்ப்பத்தில் தாபன விதிக் கோவைக்கு அமைவாக நடவடிக்கை எடுக்குமாறும் அறிவித்துள்ளார்.

## வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கக் கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், பெப்.9

யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் கூட்டம் இன்றுகாலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மத்தியஸ்தர் பரீட்சையில் ஏ.பி.சி. தரங்களில் சித்தியடைந்த சகல மத்தியஸ்தர்களையும் கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் திருமதி ரூபசிங்கம் கேட்டுள்ளார். (202)

## தமிழ்த் தினப் போட்டியில் மாணிக்கவாசகர் வித்தி.க்கு மூன்று இடங்கள்

கரவெட்டி, பெப்.9

யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில் தரம் 5 இற்குக் கீழ்ப்பட்ட பிரிவினருக்கான போட்டிகளில் கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய மாணவர்கள் வெற்றியீட்டியுள்ளனர்.

செல்வி துசிதா மனோகரன் வாசிப்பில் முதலாம் இடத்தையும் விேனாஜன் பாஸ்கரன் ஆக்கத்திறன் வெளிப்பாடு போட்டியில் முதலாம் இடத்தையும் செல்வி விதுர்ஷா லிங்கரட்ணம் பாவோதல் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளனர். (202-70)

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், பெப்.9

எதிர்வரும் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள-இதுவரை தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளாத மாணவர்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 25.ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாவட்ட செயலகத்திற்குப் பாடசாலை அதிபர் ஊடாக அனுப்பி வைக்குமாறு யாழ். அரச அதிபர் கே. கணேஷ் கேட்டுள்ளார்.

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையின்போது சகல மாணவர்களும் தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிக்க வேண்டும் என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (202)

**குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்**

## தென்மராட்சிப் பிரதேசத்தில் இயற்கையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி

யாழ்ப்பாணம், பெப்.9

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த வருடம் ஏற்பட்ட மழை வெள்ளம் மற்றும் மினி சூறாவளி ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் 15 குடும்பங்களுக்குத் தற்செயல் நிவாரணமாக தலா 20 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

இக்குடும்பங்களுக்கு முதற் கட்டக் கொடுப்பனவாக தலா 10ஆயிரம் ரூபா வீதம் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவால் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாகாண சமூகசேவைகள் திணைக்களத்தினால் இக் கொடுப்பனவுக்கான நிதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (202-207)



வல்வெட்டித்துறை றோ.க.த.க. பாடசாலையில் புலமைப் பரிசில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர். யுனிசெப் நிறுவன யாழ். வதிவிடப் பிரதிநிதி செல்வி யூடித் புறானோ மாணவர் ஒருவருக்கு பரிசில் வாங்கிக் கௌரவிப்பதை முதலாவது படத்திலும்-
கௌரவிப்புப் பெற்ற மாணவர்களையும் விருந்தினர்களாகக் கலந்து [illegible] பிரதம குரு தண்டபாணிக தேசிகர், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், யாழ்.அரச அதிபர் கே.கணேஸ், உலக உணவுத்திட்ட யாழ்.பணிப்பாளர் முகமட் சாலிகின், உலக உணவுத்திட்டப் பிரதிநிதி பிரான்சிஸ் அபான்சி, யுனிசெப் நிறுவன இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பிலிப் டுவாமெல்லே, வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, [illegible] ஆகியோரை இரண்டாவது படத்திலும் காணலாம். சிவகுரு வித்தியாலயத்தின் சமயலறையை யுனிசெப் நிறுவன இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் அருகில் பாடசாலை அதிபர் ஆ.சிவநாதன், உலக உணவுத்திட்ட யாழ். மாவட்டப் பிரதிநிதி ஆகியோர் நிற்பதையும் மூன்றாவது படத்தில் காணலாம். (70)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆயுதக் குழுவுடன் ஒப்பந்தம் செய்து தேர்தலில் போட்டியிடும் அதிசயம்

## இலங்கையில் புதிய வரலாறு என்கிறார் ஐ.தே.கட்சி எம்.பி.

கொழும்பு,பெப்.9

''இலங்கை வரலாற்றில் மட்டுமல்ல உலக வரலாற்றிலேயே முதன் முதலாக ஆயுதக் குழு ஒன்றுடன் தேர்தலில் போட்டியிடுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை செய்து கொண்டுள்ள பெருமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசையே சாரும்.''

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்திருக்கிறார்.

நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

மஹிந்த அரசு ஆயுதக் குழுவுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தமானது இலங்கையின் அரசமைப்பையும் சர்வதேச சட்டங்களையும் மீறிய செயற்பாடாகும்.

வடக்கு - கிழக்கில் பயங்கரவாதத்தை தோல்வியடையச் செய்வோம் எனக்கூறும் அரசு, நாடு முழுவதும் பயங்கரவாதத்தை வியாபிக்கச் செய்துள்ளது.

விடுதலைப் புலி பயங்கரவாதத்தை ஒழிப்பதாகக் கூறும் அரசு கிழக்கில் புதியதொரு பயங்கரவாதத்தை உருவாக்கி வருகிறது. கிழக்கில் ஆயுதக்குழுக்கள் சுதந்திரமாக நடமாடுகின்றன என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் கூறுகிறார். ஆனால், அது பவ்ரல் அமைப்பின் கண்களுக்குத் தெரியாமல் போனது கவலையளிக்கின்றது. வடக்கு - கிழக்கில் பயங்கரவாதத்தை தோல்வியடையச் செய்வோம் எனக் கூறும் அரசு நாடு முழுவதும் பயங்கரவாதத்தை வியாபிக்கச் செய்துள்ளது - என்றார். (சி)

## கோப்பாய் செயலகத்தில் பதிவு செய்த கழகங்களுக்கான கலந்துரையாடல் புதனன்று

நீர்வேலி,பெப்.9

கோப்பாய் பிரதேச செயலக வருடாந்த விளையாட்டு விழா தொடர்பான கலந்துரையாடலிலும் குழுப் போட்டிகளுக்கான நேர அட்டவணை தயாரித்தலும் எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பதிவு செய்யப்பட்ட கழகங்களை இக் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் கேட்டுள்ளார். (202-110)

## விளையாட்டு நிகழ்வுகள்

வடமராட்சி,பெப்.9

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் கே.தர்மலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பாடசாலையின் முன்னாள் அதிபர் எஸ்.தில்லையம்பலம் கலந்துகொள்வார். (202)

* * *

வலி.வடக்கு,பெப்.9

இணுவில் இந்துக் கல்லூரியின் 144 ஆவது வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு அதிபர் வி.சச்சிதானந்தம் தலைமையில் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் கலந்துகொள்வார். (202-86)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.9

நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் திருமதி மி.விமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் க.குமாரசாமி கலந்துகொள்வார். (202)

* * *

கரவெட்டி,பெப்.9

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய இல்லமெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் இ.ராகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விவசாயத் துறைத் தலைவர் கலாநிதி கு.முகுந்தன் கலந்துகொள்வார். (70)

# 4,300 சிவில் பாதுகாப்பு குழுக்களை நாடுமுழுவதும் நிறுவ நடவடிக்கை

கொழும்பு,பெப்.9

''இலங்கை முழுவதிலும் இன்னும் ஒருமாத காலத்துக்குள் 4 ஆயிரத்து 300 சிவில் பாதுகாப்புக்குழுக்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என மின்சக்தி அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் வியாழனன்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டில் உள்ள ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களில் இருந்தும் 10 பொலிஸார் இக்குழுவில் இணைக்கப்படுவர். புதிதாக 20 ஆயிரம் பேர் பொலிஸ் பிரிவில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். இவர்களில் 14ஆயிரத்து 300 பேர் தெரிவு செய்யப்படுவர். அவர்களுக்கு விசேட பயிற்சி வழங்கப்படும். பின்னர் மக்களின் இன்ப துன்பங்களில் கலந்துகொண்டு அவர்களது மனதை வெல்லக்கூடிய புதிய பொலிஸ் பிரிவாக இது செயற்படும் - என்றார். (சி)




உடுவில் கிழக்கு
கற்பகப்பிள்ளையார் கோயில்

இராஜகோபுர அடிக்கல் நாட்டுவிழா

''கோபுர தரிசனம் கோடி புண்ணியம்''.

நிகழும் மங்களகரமான சர்வசித்து வருஷம் தை மாதம் 27ஆம் நாள் 10.02.2008 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி 10 நிமிடம் முதல் 11 மணி 10 நிமிடம் வரையில் வரும் உத்தரட்டாதி நட்சத்திரம் சதுர்த்தித் திதியும் கூடிய சித்தாமிர்த யோக சுபவேளையில் இந்த இராஜ கோபுரத்துக்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது. எனவே அடியார்கள் அனைவரும் இந்த வைபவத்தில் கலந்துகொண்டு திருவருள் பெற்றுய்யவேண்டுமென வேண்டுகின்றோம்.

அனைவரும் வாரீர்!
அருட்பணியில் சேரீர்!!
அரும்பொருள் தாரீர்!!!

பரிபாலன சபையினர்.

(70974)


## மரண அறிவித்தல்கள்



### கந்தையா செல்வராசா
(M.K.S. STORES)

நவாலி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட M.K.செல்வராசா (MKS & லக்ஷ்மி ஸ்ரோர்ஸ்) 05.02.2008 செவ்வாய்க்கிழமை இயற்கை மரணம் எய்தினார்.

அன்னார் அமரர் முருகேசு கந்தையா - அழகரத்தினத்தினம் தம்பதியரின் ஏக புத்திரனும் அமரர்களான மு.இராசரத்தினம் - நாகேஸ்வரி தம்பதியரின் மருமகனும் உஷாவின் அன்புக் கணவரும் சுகனியா, லாவனியா (Kokuvil H.C.), நிறோஸ் (M.H.C.), சுலக்ஷன் (Kokuvil H.C.) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமரர்களான செல்வராஜா செல்வராணி, அமரர் இராசையா நவரத்தினம், சாம்பசிவம் சந்திரகாந்தி, கதிரமலை ஜெயராணி, இளங்கோ பாலகௌரி ஆகியோரின் சகோதரனும் உமா, சிறிகாமராஜ் - சுலோயினா, பத்மசிறிதரன்- துசாந்தி (U.K.), அனுஷா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் 05.02.2008 அன்று ஆரியம்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அறியத்தருகின்றோம்.

புலவர் வீதி,
நவாலி வடக்கு. (சி/551400)

தகவல்:
உஷா (மனைவி), பிள்ளைகள்.

### திருமதி குணரத்தினம் கனகம்மா



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் செம்மணி வீதியை வதிவிடமாகவும் கொண்ட குணரத்தினம் கனகம்மா நேற்று (08.02.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

47, செம்மணி வீதி,
நல்லூர். (70976)

தகவல்:
ந.கோவிந்தராஜா (மருமகன் - பெயின்டர் மாமா).

### சுவாமிநாதன் சின்னப்பிள்ளை

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுவாமிநாதன் சின்னப்பிள்ளை நேற்று (08.02.2008) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சாமிநாதனின் அன்பு மனைவியும் வசந்தாதேவி, பத்மநாதன், செல்வராணி, சிவயோகநாதன், பரஞ்சோதிநாதன், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், சிவகுருநாதன் ஆகியோரின் அன்புத் தாயும் குணமணி, விக்னேஸ்வரி, நாகராசா, இராசேஸ்வரி, ஈஸ்வரி, காலஞ்சென்ற சுப்பிரமணியம் ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08.02.2008) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, காந்தாளம்பிட்டி இந்துமயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் மத்தி,
சாவகச்சேரி. (70975)

தகவல்:
குடும்பத்தினர்.


சிவமயம்

நயினாதீவு - தம்பகைப்பதி அருள்மிகு
ஸ்ரீபத்திரகாளி அம்பாள் சமேத ஸ்ரீவீரபத்திரசுவாமி ஆலயம்

தெய்வீக இசைவிருந்து சிறப்பு நிகழ்வு

இடம்: ஸ்ரீ வீரபத்திரசுவாமி ஆலயம்
காலம்: 11.02.2008 திங்கட்கிழமை
நேரம்: இரவு 7 மணி

தெய்வீக இசை விருந்து நிகழ்த்துபவர்கள்:
- சங்கீத கலாநிதி நயினை நா.வி.மு.நவரெத்தினம் M.Phil, Ph.D (இந்தியா), (இசைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
- இசைவாணி தனசொரூபி நவரெத்தினம்

பக்கவாத்தியக் கலைஞர்கள்:
- சங்கீத வித்துவான் எஸ்.துரைராசா - மிருதங்கம்
- சங்கீத வித்துவான் ஏ.ஜெயராமன் - வயலின்
- சங்கீத வித்துவான் எம்.விமல்சங்கர் - முகர்சிங் தபேலா

அடியார்கள் அனைவரும் இத்தெய்வீக இசைவிருந்தில் கலந்து ஸ்ரீவீரபத்திர சுவாமியின் திருவருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(70967) முதலாம் திருவிழா உபயகாரர்கள்.


## 45ஆம் நாள் நினைவஞ்சலி



எமது குடும்ப தீபம்
திருமதி
இதயன் கோமளா

அன்னையின் மடியில்
29-09-1986

ஆண்டவனின் அடியில்
27-12-2007

துயரில்லா வாழ்வுக்குத் துணையாகி நின்றாய்-எம்
உயர்வுக்காய் நீ நாளும் மெழுகாகிப் போனாய்
அருகிலே நீயின்றி நாற்பத்தைந்து நாள்கள் இன்று
அருவியாய் எம் கண்ணில் பெருகுதுன் அன்பு
வருகிறாய் வருகிறாய் என ஏங்குகின்றோம்
ஏன் இன்னும் வரவில்லை? எமதன்புச் செல்வமே.

78, பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி.
(70969)

என்றும் உன் பிரிவால் துயருறும்:
அம்மா, கணவர், மகன், தம்பிமார், தங்கை, உறவினர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 19 | 10 |
| 01 | 01 |
| 1921 | 2008 |

அமரர்
### துவசிப்பிள்ளை இராமலிங்கம்

பாசம் என்னும் நெய்யூற்றிப் பாரில் எமைப் பார்த்திருந்தவே - எம்
நேசம் மறந்து நெடுந்தூரம் சென்றதென்ன?
பூசும் வெண்ணீறான் பூமலர்ப் பாதமதில்
வாசம் செய்யும் வரம் பெற்றுக் கண்
சுகம் இறையொளியருளில் உங்கள் ஆத்மசாந்திபெற
நெஞ்சம் நெகிழ்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 10.01.2008 அன்று எமைவிட்டுப் பிரிந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளின்போது நேரில் கலந்துகொண்டவர்கள், தொலைபேசி, கண்ணீர் அஞ்சலிகள், பத்திரிகைகள் மூலம் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், இன்று (09.02.2008) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

243, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (70971) குடும்பத்தினர்.


விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள MAZDA NPHY XXXX கன்ரர் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 2263284 (70970)

காணி விற்பனைக்கு


கொழும்புத்துறை வீதியில் சுண்டிக்குளி மகளிர் பாடசாலைக்கு அண்மையாக 3¼ பரப்பில் அமைந்த வீடும் காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: S.S.நாதன்,
இல. 16/3, விதானையார் வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 077 6146434 (70972)

திருமண சேவை

பல்வேறு துறைகளிலும் இளமாணி, முதுமாணி பட்டங்களுடன் மருத்துவம், பொறியியல், கல்வி உட்பட பல்துறைகள் சார் பதவிகளிலுள்ளவர்கள் உள்ளடங்கலாக மணமக்கள் பலருள்ளனர். (உள் - வெளிநாடுகள்) தமிழ் - இந்து, கிறிஸ்தவர்கள் சகலருக்குமான சேவைகள். அழைப்புகள் மு.ப 7 - பி.ப.9. 2229334
[illegible] (70968)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்ய பாடசாலை உடற்கல்வி ஆசிரியர்களுக்கு போதிய பயிற்சி, துறைசார் அறிவு அவசியம்



பாடசாலைகள் மட்டத்தில் விளையாட்டுத்துறையில் போதிய அபிவிருத்தியை ஏற்படுத்த முடியாமைக்கு ஆசிரியர்கள் மட்டத்தில் உடற்பயிற்சிகள் சம்பந்தமான பூரண அறிவு இன்மையும் போதிய பயிற்சிகள் இல்லாமையுமே காரணமாகும்.

யாழ். குடாநாட்டில் தேசியப் பாடசாலைகள் உட்பட பல பாடசாலைகள் உடற்கல்வி ஆசிரியர்கள் இன்றியே இயங்குகின்றன.

இவ்வாறு தெரிவிக்கிறார் பிரபல விளையாட்டு வீரரும் ஆசிரியருமான சண் தயாளன்.

பாடசாலைகளின் விளையாட்டுத்துறை தொடர்பாக அவர் வழங்கிய செவ்வியில் மேலும் தெரிவித்ததாவது:-

பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் தமது பிள்ளைகள் வெற்றிபெறவேண்டும் என்றே ஆர்வம் காட்டுகின்றார்கள்.

போட்டிகளில் இறுதிநேரத்தில் காட்டப்படும் ஆர்வம் மட்டும் வெற்றி பெறுவதற்கு உதவாது.

வெற்றிபெறவேண்டுமாக இருந்தால் அறிவும், திறனும் தொழில்நுட்பங்களும் பயன்படுத்தப்படவேண்டும்.

750 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கற்கும் பாடசாலைகளுக்கு மட்டுமே ஓர் உடற் கல்வி ஆசிரியரை நியமனம் செய்ய முடியும் என்பது அரசின் கல்விக் கொள்கை. இதனால் பல பாடசாலைகள் உடற்கல்வி ஆசிரியர் இல்லாத நிலையிலேயே இயங்கி வருகின்றன.

யாழ். கல்விக் கோட்டத்தில் தேசிய பாடசாலைகளான வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆகியவற்றில் மட்டுமே உடற் கல்வி ஆசிரியர்கள் உள்ளனர். இதே வேளை, நல்லூர்க் கோட்டத்தில் உள்ள யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பிரபல்யமான தேசிய பாடசாலையாக இருந்தும் உடற்கல்வி ஆசிரியர்கள் இல்லாத நிலை காணப்படுகின்றது. இருந்த உடற்கல்வி ஆசிரியரும் கூட இடமாற்றம் செய்யப்பட்டு மாகாணப் பாடசாலையொன்றுக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

நான் யாழ்.மாவட்டத்தில் இருந்து 1975 ஆம் ஆண்டு தேசிய மட்டப் போட்டியில் கலந்துகொண்டு 56 மீற்றர் தூரம் ஈட்டி எறிந்து முதலாம் இடத்தைப் பெற்றேன். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் என்னால் ஏற்படுத்தப்பட்ட இந்தச் சாதனையை எனது மாணவனும் தற்போது கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளருமான ம.பற்றிக் டிறைஞ்சன் பின்னர் முறியடித்தார்.

தேசிய மட்டத்தில் இன்று ஈட்டி எறிதல் 71 மீற்றருக்குச் சென்றுவிட்டது. எனினும் கடந்த கால சாதனையைக் கூட முறியடிக்க முடியாது யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை பின் தங்கிச் செல்கின்றது.

பட்டதாரி ஆசிரியர்கள் தவிர்ந்து ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, தேசிய கல்வியியற் கல்லூரிகள் ஆகியவற்றில் இருந்து வரும் ஆசிரியர்கள் அனைவரும் உடற் பயிற்சியை ஒரு பாடமாகக் கொண்டவர்கள். இவர்கள் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்ய முடியாமல் வெறும் ஏட்டுக் கல்வியுடன் வெளியேறுகின்றனர்.

செவ்வி : நேசன்

இத்தகைய சூழ்நிலை விளையாட்டுத் துறையில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை. குறிப்பாகக் கூறப்போனால் ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் நிலையங்களில் விரிவுரையாளர்களின் நியமனங்கள் கூட செல்வாக்கின் அடிப்படையில் இடம்பெறுகின்றனவே அன்றி தகுதி, திறமை பார்த்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு நியமனங்கள் செய்யப்படுவதில்லை.

இதன் காரணமாக உடற்கல்வித்துறை பல பாதிப்புக்களைச் சந்திக்கின்றது என்றே குறிப்பிடலாம்.

புதிய தொழில்நுட்பங்கள், சட்ட திட்டங்கள், ஒழுங்குவிதிகள் என நாளுக்கு நாள் விளையாட்டு மாறிக் கொண்டே செல்கின்றது. இன்றுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக யாழ். குடாநாட்டில் உள்ளவர்கள் இவற்றைத் தெரிந்துகொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

குடாநாட்டில் விளையாட்டு மைதானங்கள் என்று கூறக்கூடியவை எதுவும் இல்லை. இங்குள்ளவற்றை விளையாட்டுத்திடல்கள் என்றே கூறவேண்டும். காரணம் மைதானங்களுக்குரிய வசதிகள் இங்குள்ளவற்றில் இல்லை. யாழ்ப்பாணத்தில் இருந்து தேசிய மட்டப் போட்டிகளுக்கு கொழும்பு சென்ற விளையாட்டு வீரர்கள் அங்குள்ள மைதானங்களின் அமைப்பு வசதிகளைப் பார்த்து வாயடைத்து நின்றார்கள்.

அத்தகைய வசதிகள் கொண்டு ஒரு மைதானம் கூட எமது பிள்ளைகளுக்கு கிடைக்காமை பெரும் கவலைக்குரியதாகும்.

குடாநாட்டு மைதானங்களில் பாதணிகளை அணிந்து விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாமல் உள்ளது. இதற்கு மாறாக தென்னிலங்கை மைதானங்களில் காலணிகள் (பைற்ஸ்) இன்றி போட்டிகளில் கலந்து கொள்ள முடியாத நிலையும் உள்ளது. அத்துடன் எமது மாணவர்கள் போட்டிகளுக்கு தகுந்த முறையில் காலணிகளை பயன்படுத்த முன்வராத நிலைமையும் காணப்படுகின்றது. இதற்கு மாணவர்களின் வீட்டு பொருளாதார நிலையும் காரணமாகும்.

இதற்கு அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் உதவிகளை வழங்கினால் விளையாட்டுத்துறையை மேலும் அபிவிருத்தி செய்யலாம்.

குடாநாட்டில் பயிற்சியாளர்கள் என்ற விடயம் பெரும் சர்ச்சைக்குரியதாகும். பாடசாலைகளில் உள்ள உடற் கல்வியுடன் தொடர்புடைய ஆசிரியர்களுக்கு பெரிய அளவில் பயிற்சிகள் எதுவும வழங்கப்படவில்லை. இவ்வாறு பயிற்சி பெற்ற ஒரு சிலரும் குடாநாட்டு மாணவர் களுக்கு சேவைகளை வழங்காது வடக்குக்கு வெளியில் செல்லும் நிலையே காணப்படுகின்றது.

பயிற்சி பெற்று யாழ். குடாநாட்டில் உள்ளவர்களும் கூட அதனை பாடசாலை மட்டத்தில் முன்னெடுத்துச் செல்வதில் பின்னடிக்கிறார்கள். கடந்தாண்டு தேசிய மட்டப் போட்டிகளில் தமது திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்கள் கூட பாடசாலையை விட்டு வெளியேறியதும் இரண்டாம் கட்டப் பயிற்சிகளுக்கு உரிய ஏற்பாடுகள் இல்லாமையால் அவர்களின் திறமைகள் மழுங்கடிக்கப்படுகின்றன.

மெய்வன்மைப் போட்டிகளுக்கான மத்தியஸ்தர்கள் பரீட்சையில் கடந்த காலத்தில் பலர் சித்தியடைந்துள்ளனர். ஆயினும் தற்போது மட்டுப்படுத்திய அளவிலேயே மத்தியஸ்தர்கள் உள்ளனர். பலர் குடாநாட்டை விட்டு வெளியேறி உள்ளார்கள்.

உதைபந்தாட்டம், கிரிக்கெட், கரபந்தாட்டம், வலைபந்தாட்டப் போட்டிகளுக்கு தகுதியான மத்தியஸ்தர்கள் காணப்படுகிறார்கள். கூடைப்பந்தாட்டத்தைப் பொறுத்த வரையில் போதிய மத்தி யஸ்தர்கள் இல்லை. சங்கம் இருந்தும் கூட மத்தியஸ்தர்கள் பரீட்சைகளை நடத்துவதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளவில்லை.

பாடசாலை மட்டத்தில் வழங்கப்படும் பயிற்சிகள்தான் நாம் விளையாட்டுத் துறையில் சாதனைகளை ஏற்படுத்த வழிவகுக்கும்.

எமது மாணவர்களுக்கு வசதி வாய்ப்புகள் மற்றும் பயிற்சிகள் உரிய முறையில் வழங்கப்படுமாயின் அவர்கள் தேசிய மட்டத்தில் சிறந்த முறையில் பிரகாசிப்பார்கள் - என்றார்.

**முன்னாள் வீரரும், உடற்கல்வி ஆசிரியருமான சண். தயாளன் தெரிவிக்கிறார்**

**விளையாட்டு அரங்குகளில்**

## வரங்களின் வழி நடப்பது ஆன்மீகமே

என்வாழ்வில் என்னோடு பழகும் யாவரும் ஆண்டவர் யாரென அறியும் வண்ணம் நான் செயற்படவேண்டும். இயேசு ஆண்டவரின் நெருங்கிய உறவின் பரிணாமமும் அவர் தரும் மன்னிப்பும் - புது வாழ்வும் எனக்குரியது. என்னோடு வாழும் அனைவருக்கும் உரியது. இந்த அன்பினதும் மன்னிப்பினதும் கருவியாக நான் மாறவேண்டும். என்பதனை உணர்ந்து வாழவேண்டும்

*என் வழி நடப்பவன் இருளில் நடவான் என்ற இயேசு அளித்த ஆவி!*

*அவர் தரும் வரங்கள், அவர் தம் கனிகள் எத்தனை எத்தனை!*

*அவர் வரங்கள் அற்புதங்கள்! அவர் கனிகள் அவை யாவும் அறுசுவைகள்!*

*வரங்களின் வழி நடப்பது கனிகளின் கரம் பிடிப்பது*

*அதுதான் ஆன்மீகம்!*


(அர்த்தமுள்ள ஆன்மீகம்)

மியன்மார் நாட்டைச் சார்ந்த முன்னாள் கர்தினால் ஆண்டகை பிரான்சிஸ் சேவியர் வான்துவன், அவர் ஓர் இயேசுவின் குரு. ஆயர் என்பதற்காய் மிகக் கொடுமையான சிறையில் அடைக்கப்பட்டார். ஒரு நாள் சிறை அதிகாரி ஆயரிடம் கேட்டார் 'நீர் எங்களை அன்பு செய்கின்றீரா, என. அதற்கு ஆம் நான் உங்களை அன்பு செய்கின்றேன்'' என்றார் ஆயர். வியப்பில் ஆழ்ந்த சிறைக்கூட அதிகாரி சொன்னார். ''முடியவே முடியாது. நாம் உம்மை எந்தவித விசாரணையோ, வழக்குகளோ இன்றி வெறுமனே சிறையில் அடைத்து வைத்துள்ளோம். அப்படியிருக்க உங்களால் எப்படி எங்களை அன்பு செய்ய முடியும்? நீங்கள் சொல்வதில் உண்மை இல்லை'' என்றார்.

ஆயர் பதிலிறுத்தார்

''பல ஆண்டுகாலம் நான் உங்களோடு இங்கேதான் இருக்கின்றேன். நான் சொல்வது உண்மை என்பது உங்களுக்கே தெரியும்'' என்றார்.

''நீங்கள் விடுதலை அடைந்தால் உங்கள் சபையினரை வைத்து எம்மை கொல்லவோ, அல்லது எமது இல்லிடங்களை எரிக்கவோ மாட்டீர்களா?'' வினாவைத் தொடுத்தான் சிறைக்கூட அதிகாரி. ''ஒரு போதும் இல்லை. நீங்கள் என்னைக் கொல்லப்போவதாயினும் நான் உங்களை அன்பு செய்கின்றேன்'' என்று மீண்டும் பதிலிறுத்த ஆயரிடம் சிறைக் கூட அதிகாரி சொன்னார்:




''அது எப்படி?'', ''ஏனெனில் எங்கள் ஆண்டவர் இயேசு தன்னைப் பின்பற்றுவோரிடம் அனைவரையும் அன்பு செய்து வாழக் கற்றுக்கொடுத்தார். பகைவர் எனினும் அன்பு செய்யச் சொன்னார். அவ்விதம் நான் செய்யவில்லை எனில் நான் ஒரு கிறிஸ்தவனே அல்ல''. இதைக் கேட்ட சிறைக்கூட அதிகாரி அதிர்ச்சிக்கு உட்பட்டவராய் சொன்னார் ''நீங்கள் சொல்வது மிக அழகாய் உள்ளது. ஆனால் புரிந்து கொள்வது மிகக் கடினம் '' என்று.

✱ இயேசு ஆண்டவரைப் பற்றி என் வீட்டில் பேசுவேன் நான் பணிபுரியும் இடத்தில் பேசுவேன் என்ற நினைவுடன் செயற்படுவோமாக.

அ.ஜோ.அருள்ராஜா C.M.F

## வாசகர் திருமுகம்

### பாலை நேரகாலத்துடன் விற்பனை செய்வார்களா?

அரியாலை பால் விற்பனை நிலையம் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் இயங்கி வருகின்றது. எல்லா பால் விற்பனை நிலையங்களிலும் காலை 5.30 அல்லது 6 மணிக்கே பால் விற்பனை செய்யப்படும் பொழுது அரியாலை பால் விற்பனை நிலையத்தில் மட்டும் 7.45 - 8.00 மணிபோல்தான் பால் எடுத்து வரப்பட்டு விற்பயை செய்யப்படுகின்றது. பால் மா விலையேறியுள்ள இக்காலத்தில் போஷாக் குணவான பாலினைக் காலதாமதமாகக் கொ ண்டுவருவதால் பாடசாலை மாணவர்கள், அரசாங்க ஊழியர்கள் வேலைக்குச் செல்லும் தொழிலாளர்கள் பாலினை நேர காலத்திற்குப் பெறமுடியாமல் இருக்கிறது. இது விடயமாக குறிப்பிட்ட சங்க நிர்வாகத்துடன் நேர்முகமாகவும் கடிதமூலமாகவும் தொடர்பு கொண்டபோதும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அரியாலை, கனகரத்தினம் வீதியில் அமைந்துள்ள கிளை இல.9 பால் விற்பனை நிலையத்தை காலை 6 மணிக்கு திறந்து பால் விநியோகம் மேற்கொள்ள வழி செய்து தருமாறு அதிகாரிகளை வேண்டுகின்றோம்.

*அரியாலை.*

*ஊர் மக்கள் சார்பாக*
மகேந்திரன்.

### புங்குடுதீவு செல்லும் பயணிகளின் சிரமம்


புங்குடுதீவு மக்கள் பி.ப. 5 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து புங்குடுதீவுக்குச் செல்வதற்கு வாகன வசதி இல்லாமல் அவலப்படுகிறார்கள். தனியார் பஸ் சேவைகள் 4.30 மணியுடன் தங்கள் போக்குவரத்தை நிறுத்திக் கொள்கிறார்கள். அரசாங்க உத்தியோகத்தர்களும் கடைச் சிப்பந்திகளும் பெரியாஸ்பத்திரியின் நோயாளர்களைப் பார்வையிட செல்பவர்களும் கொழும்பில் இருந்து விமானத்தில் வருபவர்களும் இந்த வேளையில் புங்குதீவுக்கு செல்ல முடியாமல் இருக்கிறார்கள். அத்துடன் புங்குடு தீவு வர்த்தகர்கள் காலை நேரத்துடன் திருநேல்வேலி சந்தைக்குப் போகமுடியாமல் இருக்கிறார்கள். அரசாங்க போக்குவரத்துச் சபை இதில் அக்கறை எடுப்பது தார்மீக கடமை. அரசாங்க போக்குவரத்து பஸ்ஸை இரவு நிறுத்துவதற்கு புங்குடுதீவு சர்வோதயமும் பிரதேச சபையும் இருக்கும் பொழுது அங்கு வாகனத்தைப் பாதுகாப்பாக நிறுத்த முடியும். இது சம்பந்தப்பட்டவர்களுக்கு சமர்ப்பணம்.

*வங்களாவடி, வேலணை.*

வே.திருநாவுக்கரசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி நகர் கிராம அலுவலர் திரு.
# சேவைநலன் பாராட்



## ஆசிச்செய்தி

இன்று மணிவிழாக் காணும் சாவகச்சேரி கல்வயலூர் கிராம சேவையாளர் வை. இராசரத்தினம் அவர்களுக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அவர் கிராம சேவையாளராக மட்டுமல்ல சமூகத் தொண்டனாக - நண்பனாக மக்கள் உள்ளங்களில் என்றும் நிலைத்து நிற்பவராக சாவகச்சேரி நகரிலே சிறந்து விளங்குகின்றார். யார் தம்மைத்தேடி வந்தாலும் சிறுமை, பெருமை பாராது எல்லோரிடத்திலும் ஒரே தன்மையாக வேண்டியவற்றைத் திருப்திகரமாகச் செய்து கொடுப்பார். மக்களுக்கு சில கஷ்டங்கள் நேரிடுகின்ற சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு அன்பான வார்த்தை கூறி ஒரு நண்பனைப் போல தம்மாலியன்றதைச் செய்து கொடுத்து வந்த நற்பண்பாளன். அவருடைய ஓய்வு எல்லோருக்கும் சிறிது மனக் கஷ்டத்தைத் தரும் என்பது உண்மை. இருந்தாலும் இவ்வளவு காலமும் சாவகச்சேரி மக்களுக்கு அருந் தொண்டாற்றி ஓய்வு பெறுகின்ற தலை சிறந்த கிராம சேவையாளர் பல்லாண்டுகாலம் அவர் தன் மனையாளுடன் நல்வாழ்வு வாழ எல்லாம் வல்ல இறைவன் திருவருளைப் பிரார்த்தித்து நல்லாசி கூறி அமைகின்றேன்.

சி.சிதம்பரநாதக்குருக்கள், திருக்கணித பஞ்சாங்க ஆசிரியர், சாவகச்சேரி.

## அரசாங்க அதிபரின் ஆசிச் செய்தி



சாவகச்சேரி நகர் கிராம அலுவலர் வைத்திலிங்கம் இராசரத்தினம் தமது சேவையின் நின்றும் ஓய்வுபெறுவதை முன்னிட்டு அவருக்கு வாழ்த்து வழங்குவதில் உளமார்ந்த உவகை அடைகிறோம்.

தென்மராட்சிப் பிரதேச செயலாளர் பிரிவின் 31 வருடங்களாக கிராம அலுவலர் பணியினை (மக்கள் சேவை மகேசன் தொண்டு) என அர்ப்பணிப்புடன் பணியாற்றியமை மிகவும் பாராட்டிற்குரியது. அதாவது 1971ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை சிறப்பானதொரு பணியாற்றியுள்ளார். குறிப்பாக மந்துவில் பிரதேச மக்களால் 'சேவா நேசன்' என்ற பட்டம் கொடுத்து கௌரவித்தமை தென்மராட்சிப் பிரதேச செயலாளரும் 'மெச்சுரை' வழங்கி கௌரவிக்கப்பட்டமை என்பன மெச்சுதற்குரியன.

"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது" என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப யுத்த அனர்த்த காலத்தில் (1995ஆம் ஆண்டு) இடருற்ற மக்களது தேவைகளை அடையாளம் கண்டு அவர் தம் குறைகளைப் போக்க முன் நின்னின்று உழைத்தார். தென்மராட்சிப் பிரதேசத்தின் விளையாட்டுத் துறை, நகரப்பகுதியின் வீதி அபிவிருத்தி, பொது இடங்களில் மரநடுகைத்திட்டம் அமுல் படுத்துதல், கலை கலாசாரப்பணி, சமயப்பணி, 50 வீட்டுத்திட்டம் என்பன இவரது பணிகளில் கோடிட்டுக் காட்டற்பாலன.

இவற்றோடு மட்டும் நின்று விடாது பாலர் தாம் கூடி விளையாடி கல்வி கற்பதற்கு ஏதுவாக அமைந்த புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் நிர்வாக சபைத் தலைவராகவும் தனது பணியினை விஸ்தரித்து சேவா நேசனாக விளங்கும் இராசரத்தினம் அவர்கள் தனது பணியினை சேவை ஓய்வுக்குப் பின்னரும் தொடர்ந்து முன்னெடுத்துப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துகிறேன். வாழ்க.

க.கணேஸ், அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்.



## கர்ம வீரன்

கிராம அலுவலர் வை.இராசரத்தினம் அவர்கள் தமது கடமையை சேவையாக நினைத்து செயற்பட்ட கர்ம வீரனாவார். அவர் தனது கடமையோடு மாத்திரம் நில்லாது சகல பொது ஸ்தாபனங்களிலும் முக்கிய பங்கு வகித்து மக்களுக்கு சீரிய சேவையை அளித்து வருகிறார். குறிப்பாக தென்மராட்சி கலைமன்றத்தின் செயலாளராகப் பதவியேற்று அந்தக் கட்டடத்தை மிகச்சிறப்பாகக் கட்டிமுடித்து தென்மராட்சி மக்களுக்கு கலைத்துறையில் மிக முக்கிய சேவையை ஆற்றியுள்ளார். இவர் எனது வழியிலே நின்று சேவைக்கு முன்னுரிமை அளித்தும் தென்மராட்சி கலைமன்றத்தில் நான் தலைவராக இருந்து மாறிச் சென்றதும் அதனைப் பொறுப்பேற்று கட்டடத்தை நிறைவு செய்தும் எனது சொந்தப் பாராட்டைப் பெற்றுள்ளார். அவரின் சேவை நீடூழி வாழ்க.

க.துரைராஜா, முன்னாள் உதவி அரசாங்க அதிபர், தென்மராட்சி.

## எடுத்த காரியத்தைத் திறம்பட முடிப்பவர்



இராசரத்தினம் அவர்களும் நானும் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் ஒரேகாலப்பகுதியில் கல்வி கற்றவர்கள். அக்காலம் தொடக்கம் இன்றுவரை அவரது செயற்பாடுகளை அறிந்தவர்களில் நானும் ஒருவன். அவர் எடுத்த காரியங்களைத் திறப்பட நடைமுறைப்படுத்துவதில் வல்லவர். நேர்மையும் நிதானமும் மிக்கவர். சாவகச்சேரி பட்டின கிராமசேவகர் பிரிவில் மக்களுக்கு கிராமசேவையாளராக பலவருடங்கள் சேவையாற்றிப் பலரது மதிப்பையும் பாராட்டையும் பெற்றவர். தென்மராட்சி இடப்பெயர்வுக்குப் பின்னர் சாவகச்சேரிப் பகுதியில் வாழ்வாதார நிலைமையை வழமைக்கு கொண்டுவருவதற்கு கிராமசேவையாளர் என்ற முறையில் அவர் ஆற்றிய பங்கு பாராட்டப் படவேண்டியது. இக்காலப்பகுதியில் தென்மராட்சி நலன்புரி சங்கத்துடன் சேர்ந்து இயங்கியதுடன் சங்கச் செயற்பாட்டுக்கு உறுதுணையாகவும் இருந்தார் என்பதை இங்கு குறிப்பிட்டுக் கூற விரும்புகின்றேன். மேலும் அவர் நல்ல சமய நம்பிக்கையுடைய சமூகசேவையாளர். அவர் தனது ஓய்வு காலத்தில் சமய ,சமூக சேவைகளைச் சிறப்பாகச் செய்து இன்புற்று வாழ்க என இறைவனை வேண்டுகிறேன்.

பேராசிரியர் க.கந்தசாமி, பீடாதிபதி, உயர்பட்ட படிப்புகள்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்.



## யாழ்.மாநகர ஆணையாளரின் வாழ்த்துச் செய்தி

சாவகச்சேரி நகரக் கிராம அலுவலராக மகத்தான சேவை புரிந்து மக்களுக்கு மகத்தான சேவைகள் செய்து 09.02.2008இல் ஓய்வுபெற்றுச் செல்லும் இராசரத்தினத்திற்கு வாழ்த்து தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

வெறுமனே அரச சேவை என்றில்லாது பொதுச்சேவையிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து சேவை புரிந்துள்ளார்.

இவர் அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்றாலும் பொதுச்சேவையில் இருந்து ஓய்வு பெற நாம் அவரை அனுமதிக்கமாட்டோம். அவர் நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறோம்.

மு.செ.சரவணபவ, மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.

## மனங்கவர் மக்கள் சேவையாளர்



மணி விழாக் காணும் சாவகச்சேரி நகர் கிராம அலுவலர் வை.இராசரத்தினம் அவர்கள் தென்மராட்சியிலேயே சிறந்த ஒரு கிராமசேவையாளராகப் பணிபுரிந்து மக்கள் உள்ளங்களில் நிலைத்து நிற்கின்றவர். அதேவேளை தனது பிரதேசத்தில் உள்ள பல்வேறு சமூக, சமய, கல்வி நிறுவனங்களில் தலைமை தாங்கி வழி நடத்தி வருபவர். மக்கள் தொண்டன்,சமூகத்தின் கலங்கரை விளக்கு இத்தகைய பல்வேறு சிறப்புகளையும் பெற்று ஓய்வுபெறுகின்ற இச்சிறந்த சமூகசேவையாளரை வாழ்த்தி ஆசி வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

வாழ்க! நலம் பல பெறுக!

திருமதி.அ.வேதநாயகம், தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர்.



## மானிட நேயன்

சிரித்த முகமும் சீரிய பேச்சும்கடமையில் கண்ணியமும் காரியத்தில் கெட்டித்தனமும் பொறுப்பினிலே பெருந்தகையும் பொறுமையிலே பொக்கிசமுமாக மண்ணின் மக்களுக்காக உழைத்திட்ட எங்கள் இராசரத்தினம் தன் சேவையில் ஓய்வு பெற்றாலும் அவர்தன் சேவையால் மண்ணே பெருமை பெற்றதன்றோ. மேலும் அவர் சேவை, அவர் ஆயுள், அவர் குடும்பம் உயர என்றும் எனது நல்லாசிகள்.

சி. சிவகரன், மாவட்ட நன்னடத்தை உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்.

## பணியால் பதவியை பெருமைப்படுத்தியவர்



அகவை அறுபதைப் பூர்த்தி செய்யும் இராசரத்தினம் அவர்கள் எமது கல்லூரியின் பழைய மாணவன். நேர்மையும் உண்மையும் விசுவாசமுடைய கிராம சேவையாளன். சேவகன் அல்லது சேவையாளன் என்ற சொல்லுக்கு உண்மையாகவே அர்த்தம் கொடுத்த பணியாளன். நலிந்தோரினதும், பின்தங்கியோரினதும் மேம்பாட்டிலேயே கிராம மேம்பாடு உள்ளது என்ற நோக்கில் செயற்படுபவர். அழிந்துபோன எமது சாவகச்சேரி நகரை மீளக்கட்டியெழுப்புவதில் அயராது உழைத்தவர். இன்றும் அந்நகரைப் பொலிவு பெறச் செய்வதில் அக்கறையுடன் உழைத்து வருபவர். அவர் தனது கடமையிலிருந்து ஓய்வு பெற்றாலும், தான் முன்னெடுத்துவரும் சமூகப் பணிகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வெற்றியடைய இறையருளை வேண்டுகின்றேன்.

க. அருந்தவபாலன், அதிபர், யா/டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி.



## நேர்மையும் கடமையுணர்வும் மிக்க ஒரு சேவையாளர்

மணிவிழா நாயகன் வை.இராசரத்தினம் அவர்களும் நானும் சமகாலத்தில் யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் கல்வி கற்றவர்கள் என்ற வகையில் அவரை மிகவும் நன்றாக அறிந்திருந்தேன். கல்வி கற்றகாலத்திலும் அரச பணியாற்றிய காலத்திலும் மிகவும் பணிவாகவும் சிரத்தையுடனும் மனித நேயத்துடனும் எல்லா மக்களுக்கும் பணியாற்றி அம்மக்களின் மனங்களில் நீங்கா இடத்தைப் பெற்றுள்ளார்.

அதேவேளை எமது பிரதேசத்திலுள்ள சமூக நிறுவனங்களில் எல்லாம் தலைமை வகித்து மக்களுக்கு உரிய பல பணிகளை ஆற்றியுள்ளார். எந்தச் சந்தர்ப்பத்திலும் எந்தவிதமான பிரச்சினைகளையும் இலகுவாகவும் எதிர்நீச்சல் மூலமும் செயலில் வெற்றி பெற்று மக்கள் மனங்களில் ஒரு மாணிக்கம் போல திகழ்கின்றார். இத்தகைய சிறப்புமிக்க பண்பாளருக்கு ஆசி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

வ.க.இராஜரத்தினம், யாழ்.விஞ்ஞான தொழில் நுட்ப பல்கலைக்கழகம், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## சேவா நேசன்

## திரு.வைத்திலிங்கம் இராசரத்தினம்

(Diploma in Journalism) கிராம அலுவலர் தரம் I

### கிராம அலுவலர் சேவைக்கால விவரம்:

1) 25.04.1977 - 14.03.1980 - வரணி வடக்கு 2)15.03.1980 - 31.08.1987 - நுணாவில்
3) 01.09.1987 - 26.02.1991 - கல்வயல் 4) 27.02.1991 - 08.02.2008 - சாவகச்சேரி நகர்

தமது கடமைகளுடன் தென்மராட்சிப் பிரதேசப் பொதுப்பணிகளில் முக்கிய பங்கு வகித்து சேவையாற்றி வருகின்றார்

சமூக - சமயப் பணிகள்:-

| | |
|---|---|
| 1. தலைவர் | - சாவகச்சேரி ஸ்ரீ பழனியாண்டவர் ஆலய பரிபாலன சபை |
| 2. தலைவர் | - மந்துவில் புளியந்திடல் ஸ்ரீகந்தசுவாமி கோயில் பரிபாலன சபை |
| 3. தலைவர் | - சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையம் |
| 4. தலைவர் | - சாவகச்சேரி தென்னகைத் தாரகை விளையாட்டுக் கழகம் |
| 5. செயலாளர் | - தென்மராட்சிக் கலைமன்றம் |
| 6. பொருளாளர் | - சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபை |
| 7. நிர்வாக சபை உறுப்பினர் | - யாழ்.மாவட்ட கலாசாரப் பேரவை |
| 8. நிர்வாக சபை உறுப்பினர் | - இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க சாவகச்சேரி கிளை |
| 9. நிர்வாக சபை உறுப்பினர் | - சாவகச்சேரி நகர அபிவிருத்தி ஆலோசனைச் சபை |
| 10. நிர்வாக சபை உறுப்பினர் | - தென்மராட்சி நலச் சேவைகள் சங்கம் |

### சேவையின்சிகரம்

தென்மராட்சிப் பிரதேசத்திலே மந்துவில் மேற்கில் வைத்திலிங்கம் - தங்கமுத்து தம்பதியினருக்கு மகனாக 09.02.1948இல் பிறந்தார். வை.இராசரத்தினம் தனது ஆரம்ப, இடைநிலைக் கல்வியினை மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம், வரணி மகாவித்தியாலயம், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆகியவற்றிலே கற்று உயர்கல்வியினைப் பலாலி கனிஷ்ட பல்கலைக் கழகத்தில் பயின்று 'பொதுசனத் தொடர்பும் பத்திரிகைக் கலையும்' எனும் துறையிலே டிப்ளோமா பட்டம் பெற்றார். பற்பலர் அறியும் பாங்குறு பதவியான கிராம அலுவலர் பதவியினை 25.04.1977ஆம் திகதி பெற்று 31 ஆண்டுகள் போற்றத்தக்கவகையில் பணியாற்றியுள்ளார். வரணி வடக்குப் பிரிவிலே முதல் நியமனத்தைப் பெற்றுக் கொண்ட இவர் அப்பிரதேச மக்களின் வாழ்க்கைத் தர நிலைகளை அறிந்து அவர்களுக்குத் தம்மாலான உதவிகளைப் பெற்றுக் கொடுத்து கடமையின் ஆரம்ப கட்டத்திலேயே மக்களின் பேரன்பிற்கு உரித்தானவர் ஆனார்.

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவிலே வரணி வடக்கு, நுணாவில், கல்வயல், சாவகச்சேரி நகர் ஆகிய பிரிவுகளிலே நிரந்தரக் கிராம அலுவலராகவும் சரசாலை வடக்கு, சாவகச்சேரி வடக்கு, மட்டுவில் - நுணாவில், கோயிற்குடியிருப்பு, மந்துவில் வடக்கு, மந்துவில் கிழக்கு, மந்துவில் மேற்கு ஆகிய பிரிவுகளிலே பதிற் கிராம அலுவலராகவும் சிறப்புப் பணிபுரிந்துள்ளார். 1991ஆம் ஆண்டு சாவகச்சேரி நகர்க்கடமையைப் பொறுப்பேற்று 17 ஆண்டுகளாக இவர் ஆற்றிய சேவைகள் அளப்பரியது. பதவிப் பணி நிலையிலும், பொதுச் சமூகப் பணியிலும் இவர் ஆற்றிய சேவைகள் நெஞ்சில் நிலைக்கத்தக்கவை. தென்மராட்சிப் பிரதேச செயலக விளையாட்டுக் குழுவில் நம்பகப் பொறுப்புயர் பொருளாளராகப் பல காலம் பணியாற்றி, கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியைச் சிறப்புற நடத்த உதவியவர். பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கப் பொருளாளராகவும் செயலாளராகவும் நீண்டகாலம் நிறை பணியினைக் குறைவறப்புரிந்துள்ளார்.

நிர்மாணம் செயற்பாட்டு நிலையிலே நிலையான பெருமையினை நிலைநிறுத்திய பாங்கு நினைவிற் கொள்ளத்தக்கது. மந்துவில் கிழக்கிலே 50 வீட்டுத்திட்டம், ஆரம்ப சுகாதார நிலையம், பகல் பராமரிப்பு நிலையம் ஆகியவற்றை அமைக்க அரும்பாடுபட்டவர். இவரது உழைப்பால் உயர்ந்த மந்துவில் கிழக்கு மக்கள் இவருக்கு "சேவா நேசன்" என்ற சிறப்புப் பட்டம் வழங்கிக் கௌரவித்து மகிழ்ந்தனர். தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கான கட்டட நிர்மாணத்தின்போதும் கட்டடத் திறப்பு விழாவின்போதும் இணைப்பாளராக இருந்து முக்கிய பங்காற்றியுள்ளார். கடமையேற்ற காலம் முதல் செயலகச் செயற்பாடுகள் சிறப்புற அமைய உயரிய ஒத்துழைப்பு அளித்துள்ளார். மேலும் தென்மராட்சிக் கலைமன்றக் கலாசார மண்டபம் அமைந்திட அரும்பணியாற்றி அதன் செயற்பாடுகளையும் ஒழுங்கமைக்கும் வகையில் செயற்றிறன் மிக்க செயலாளராகச் செயற்பட்டு வருகின்றார். நோயினால் நொடித்தோரின் இடர்களையும் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு உதவும் வகையில் அபிவிருத்திச் சபை செயலாளராக அயராது பணிசெய்து வருகின்றார். கல்வயல் கிராம அலுவலர் பிரிவில் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் பெறுநோக்கு மண்டபம், மேனுஜா மழலைகள் கல்விப் பூங்காக் கட்டடம் ஆகியவற்றை அமைத்துள்ளார்.

தலைமை தாங்கும் தனிச்சிறப்புப் பெற்ற கிராம அலுவலர் அவர்கள் சாவகச்சேரி ஸ்ரீ பழனியாண்டவர் ஆலய பரிபாலனசபை, மந்துவில் புளியந்திடல் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் பரிபாலனசபை, சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையம், சாவகச்சேரி தென்னகைத் தாரகை விளையாட்டுக்கழகம் ஆகிவற்றின் தலைவராக இருந்து அவற்றை வழிநடத்தி வளர்க்கும் நிலை போற்றத்தக்கதாகும். ஆலயப் பணியிலும் அரும்பணியாற்றும் அடியவராக நின்று ஸ்ரீ பழனியாண்டவர் ஆலயத்திலே வருடந்தோறும் ஆடிவேல் விழாவினை அழகுற ஒழுங்கமைத்து நடத்தி வருகின்றார். மேலும் நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாதிருந்த மந்துவில் புளியந்திடல் ஸ்ரீ கந்தசுவாமி கோயிற் பணிகளை நிறைவாக்கி கும்பாபிஷேகத்தை நடத்தி முடிப்பதற்கு பாரிய பங்களிப்பை நல்கியவர் இவரென்றால் மிகையாகாது.

மேலும் யாழ்.மாவட்டக் கலாசாரப் பேரவை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க சாவகச்சேரிகிளை, சாவகச்சேரி நகர அபிவிருத்தி ஆலோசனைச்சபை, தென்மராட்சி நலச்சேவைகள் சங்கம் ஆகியவற்றின் நிர்வாகசபை உறுப்பினராக விளங்கி பல்துறைப் பணிகளைப் புரிந்து வருகின்றார். இடம் பெயர்ந்தோருக்கும் இன்னலுற்றோருக்கும் ஏற்ற பணிகளைப் புரிந்த வகையில் 1983, 1987, 1990, 1995ஆம் ஆண்டுகாலப் பகுதிகளில் ஏனைய பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சிக்கு வந்தோருக்கு வேண்டிய உதவிகளைப் புரிந்தமை குறிப்பிடத்தக்கது.

பற்றுயர் பாங்க தோடு பற்பல கிராம மாக
உற்றுயர் அலுவ லாற்றி ஒப்பரும் பொதுத் தொண்டோடு
மற்றுயர் மாண்பு துற்று மணியவர் இராசரத்தினம்
பெற்றுயர் பேறு எல்லாம் பெற்றுமே ஓய்வில் வாழ்க!

சாவகச்சேரி நகர் வாழ் மக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு.வை.இராசரத்தினம் அவர்களின் பாராட்டுச் சிறப்பு மலர்

## ஆயிரம் பிறை காண வாழ்த்துகிறோம்



சாவகச்சேரி நகர் கிராம உத்தியோகத்தர் வைத்திலிங்கம் இராசரத்தினம் அவர்களின் பணிகள் பல்நிலைப்பட்டவை. நகரின் கிராம அதிகாரியாக 17ஆண்டுகளும் கல்வயல் கிராம அதிகாரியாக கடந்த 5 ஆண்டுகளும் பதவி வகித்த வை.இராசரத்தினம் நாட்டின் கஸ்டமான காலத்திலும் தமது உத்தியோகம் சார்ந்த பணிகளை மக்களுக்கு சிறப்பாகவும் அன்பாகவும் பயனுள்ளதாகவும் செய்து வருவது அனைவருக்கும் தெரிந்ததே.

தன் பதவி வழிப் பதவிகளுடன் சமூக, சமய, தமிழ் சார்ந்த சேவைகளை நிறைவாகச் செய்து வருபவர். சாவகச்சேரியில் இயங்கும் பொதுப்பணி மன்றங்கள் அனைத்திலும் அங்கம் வகித்து நற்பணிகளில் ஈடுபடும் இவரின் பணியால் பலரும், நகரும் பயனடைந்துள்ளன. தென்மராட்சி தமிழ் கலாமன்றம் சிறப்புற சகல வசதிகளுடன் கூடிய மண்டபம் அமைத்து அது இன்று நல்ல படியாக இயங்குவதற்கு இவர் ஒரு காரண கர்த்தாவாக விளங்கியவர். பல சமய ஸ்தாபனங்களுடன் தொடர்புள்ள இவர் நகரின் ஆலயங்களின் நிர்வாக வளர்ச்சியிலும் பங்குகொண்டு தெய்வீக அறப்பணிகளை ஊக்குவிப்பவர். அன்பான பேச்சும் உதவி புரியும் உள்ளமும் கொண்ட இவர் கால ஓட்டத்தால் அறுபது அகவையை சஷ்டியப்த பூர்த்தி செய்வதன் மூலம் அரச பணியிலிருந்து ஓய்வு பெறினும் தொடர்ந்து சதாபிஷேகம் கண்டு ஆயிரம் பிறை கண்டு நிறைவாக வாழ்ந்து சைவத் தமிழ் உலகிற்கு நிறைவானச் சேவைகள் செய்ய இறைவன் அருள் வழங்க வேண்டுமென ஆசி வழங்கி வாழ்த்துகிறேன்.

கலாநிதி சிவஸ்ரீ.து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள், சாவகச்சேரி.

## மக்கள் சேவையாளர்



மணிவிழாக் காணும் எங்கள் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய கிராமசேவையாளர் வை.இராசரத்தினம் அவர்களுக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். நாம் வாழ்ந்த எந்த நிலைமைகளிலும் சூழ்நிலைகளிலும் தம்மை முழுமையாக அர்ப்பணித்து மக்கள் பணியாற்றிய சேவையாளன் என்றும் பாராட்டிற்குரியவர். இவரது அறிவும் ஆற்றலும், இறை சிந்தையும் கிராம சேவையாளர் என்ற பதவி வழி சேவையாளனாக மட்டுமல்லாமல் ஒரு சமுகத் தொண்டனாக மக்கள் சேவையாளனாக இவர் ஆற்றிய பணிகள் மூலமாக மக்கள் உள்ளங்களிலேயே ஒரு நீங்காத இடத்தைப் பெற்றுக் கொண்ட இவரை இந்நாளில் வாழ்த்துகின்றேன். 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்ற வார்த்தையைத் தாரக மந்திரமாகக் கொண்டு செயலாற்றிய எங்கள் கிராம சேவையாளர் அரசசேவையில் ஓய்வுக்குரிய வயதை அடைந்திருந்தாலும் மக்கள் உள்ளங்களிலே என்றும் அன்புக்குரியவராக மதிப்புக்குரியவராகவே காணப்படுவார். இந் நாளில் இவரது அர்ப்பணிப்புள்ள மக்கள் பணி இவருக்கு நிறைவான மன நிறைவை கொடுத்திருக்கும். இந்த மனநிறைவே இன்னும் பல சமய, சமூக பணிகளை முன்னெடுத்துச் செல்லும் போது இறைவனின் வழித்துணையாக அமையும். உங்கள் மக்கள் பணி மென்மேலும் வளர வாழ்த்துகிறேன். எல்லாம் வல்ல இறைவனின் நல்லாசிகள் எப்போதும் உங்கள் அனைவரோடும் நிறைவாக இருப்பதாக.

வண.ரி.எச்.வசந்தகுமார், தென்னிந்தியத் திருச்சபை, சாவகச்சேரி.

## அனைத்து விடயத்திலும் இவர் பங்காற்றுவார்



சாவகச்சேரி நகரைக் கிராம அலுவலராகக் கடமை புரியும் வை. இராசரத்தினம் அவர்கள் 09.02.2008 முதல் அரச வேவையிலிருந்து ஓய்வுபெறுகின்றார். இவர் கிராம அலுலவராகக் கடமை புரிந்த காலப்பகுதியில் சாவகச்சேரி நகர சபையால் அமுலாக்கப்பட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களையும் வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு அரும்பாடுபட்டு உழைத்திருக்கிறார். பிரதேச செயலகத்தின் எந்நிகழ்வாக இருப்பினும் இராசரத்தினம்தான். பிரதேச செயலகத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நிகழ்வாகவிருந்தாலும் சரி இங்கு நடைபெறுகின்ற கலாசார நிகழ்வுகளாகவிருந்தலும்சரி அங்கே இவரது பங்களிப்பு இருந்தது. தென்மராட்சி கலாசார மண்டபம் உருவாவதிலும் இவரது பங்களிப்பு இருந்தது. நகரிலுள்ள பகல் பராமரிப்பு நிலையம் திறம்பட இயங்குவதற்கு இவரது அர்ப்பணிப்பும் ஒரு காரணமாகும். பிரதேச மட்டத்தில் மாத்திரமல்ல மாவட்ட மட்டத்திலும் கலாச்சாரப் பேரவை உறுப்பினராகவிருந்து கலாச்சார வளர்ச்சிக்கு இவர் ஆற்றிவரும் பணி குறிப்பிடத்தக்கதாகும். எல்லோரிடமும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் அவரின் சமூக சேவை தொடர்ந்தும் இப்பிரதேச மக்களுக்குக் கிடைத்திட இறைவன் நல்லருள்பாலித்திட வேண்டுமென இறைஞ்சுகின்றேன்.

செல்லமுத்து ஸ்ரீநிவாஸன், பிரதேச செயலர், சாவகச்சேரி.

## மக்கள் சேவையாளர்



ஓய்வு பெற்றுச் செல்கின்ற வை.இராசரத்தினம் அவர்களின் சீரிய நற்பணிகளை நான் தென்மராட்சிப் பிரதேசத்தின் உதவி அரசாங்க அதிபராகவும் பிரதேச செயலாளராகவும் மற்றும் திட்டப்பணிப்பாளராகவும் கடமையாற்றிய வேளைகளில் நன்கு அறிந்திருந்தேன்.

மக்களின் தேவைகளை உணர்ந்து அதனை உடனுக்குடன் நேர்மை, கடமை, அர்ப்பணிப்புப் போன்ற நற்பண்புகளுடன் பூர்த்திசெய்து வந்த ஒரு செயல் வீரர் சாவகச்சேரி நகர் கிராம அலுவலகராக பணியாற்றிக் கொண்டிருந்தார். அதேவேளை வேறு பல கிராமங்களிலும் பதிற் பணிகளையும் சிறப்பாக ஆற்றி வந்துள்ளார்.

போரினால் அழிவுற்று பாலைவனமாகக் காட்சியளித்த சாவகச்சேரி நகரம், தென்மராட்சிப் பிரதேச செயலகம், சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை, தென்மராட்சி கலை மன்றம் போன்றவை இன்று புதுப் பொலிவு பெற்று மிளிர்வதற்கு ஒரு காரண கர்த்தாவாக விளங்குபவர். தன் அரச பணிகளுடன் பிரதேசத்தின் சமூக, சமய நிறுவனங்களிலும் தலைமை வகித்து மக்களுக்குப் பற்பல பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கின்றார்.

இத்தகைய சிறந்த ஒரு மக்கள் சேவையாளனை வாழ்த்தி ஆசி வழங்குவதுடன் அவர் அரச பணியிலிருந்து ஓய்வுபெற்றாலும் அவரின் சமய, சமூகப் பணிகள் மேலும் தொடர்ந்து அவரும் இன்புற்றிருக்க வேண்டுமென எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டுகிறேன்.

பு.சுந்தரம்பிள்ளை, உதவிச் செயற்திட்டப்பணிப்பாளர், வட கிழக்கு விடமைப்புப்புனர் வாழ்வுத்திட்டம் (NEHRP), திருகோணமலை, ஒய்வுபெற்ற பிரதேச செயலாளரும், திட்டப்பணிப்பாளரும்.

## சிறந்த சேவையாளன்



இராசரத்தினம் அவர்களை எனக்கு 25 வருடங்களுக்கு மேலாகத் தெரியும். ஒரு கிராம தலைமைக்காரனுக்கு இருக்கவேண்டிய அனைத்துப் பண்புகளும் நிறைந்தவர். பொது மக்களை மிகவும் அன்பாக அரவணைத்து இம்மாவட்டத்தின் போர்ச் சூழ்நிலைக்கேற்ப அவர்களின் தேவைகளை உணர்ந்து உடனுக்குடன் செய்து கொடுத்து தனது தேச மக்களின் பாராட்டைப் பெற்றவர். கிராம அலுவலகர்களின் பற்றாக்குறை காரணமாக இரண்டு, மூன்று கிராம அலுவலர் பிரிவுகளில் கடமைகளைப் பொறுப்பேற்று ஓய்வு ஒழிவின்றி கடமையாற்றி அதிகாரிகளினதும் பொது மக்களினதும் பாராட்டைப் பெற்றவர். அது மட்டுமல்லாது தென்மராட்சி வைத்தியசாலை அபிவிருத்தி சபை, தென்மராட்சிக் கலைமன்றம், யாழ் மாவட்ட கலாசார மன்றம் போன்ற பொது அமைப்புக்களில் பங்கேற்று இப்பிரதேசத்தின் அபிவிருத்திக்காகவும் முன்னின்று உழைத்தவர். 2001ஆம் ஆண்டு தென்மராட்சியில் எற்பட்ட இடப்பெயர்வின் பின் மக்கள் மீளக்குடியமர தொடங்கியபோதே முற்றுமுழுதாக அழிந்து போயிருந்த சாவகச்சேரி பொதுச்சந்தையை மீளமைப்பதற்கு காலஞ்சென்ற யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் அவர்களுடன் ஒன்றிணைந்து செயற்பட்டதன் மூலம் மக்கள் மீள்குடியமர நம்பிக்கை ஊட்டியவர். இராசரத்தினம் அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றாலும் அவரது பொதுத் தொண்டு தொடர வேண்டுமென வேண்டி அவர் ஓய்வு காலம் அமைதியாகவும் வளமாகவும் அமைய எல்லாம் வல்ல ஆண்டவனை வேண்டி அமைகிறேன்.

க. கேதீஸ்வரன், ஒய்வுபெற்ற பிரதேச செயலாளர், திட்டப்பணிப்பாளர்.

## பருதிபோல் வாழி நீடு



அன்புள்ளம் அடக்கம் வாய்மை அரிய நற்குணங்கள் ஒன்றாய்
கொண்டதோர் குணத்தின் குன்று குறைவிலா சமூகத் தொண்டன்
இன்புற இறைவன் பாதம் தன்னை இறைஞ்சிடும் இராசரத்தினம்
கண்ணென மக்களைக் காத்து கடமையில் வீரனானன்
எண்ணிடில் இக் கிராம சேவகர் ஏனையோர்க்கு ஓர் எடுத்துக்காட்டு
அன்புள்ளத்தோடு செய்த சேவை ஆண்டவனுக்கிட்ட பூவேயாகும்
தொண்டதைச் செய்தோர் தம்மை தொலைப்பாரோ நினைவில் மக்கள்
பன்னெடுங்காலம் மனையாளோடு பருதிபோல் நிலைத்து வாழி.

விகடகவி மு. திருநாவுக்கரசு, முன்னாள் யாழ். மாவட்ட நீதிபதி.

## வாழ்த்துச் செய்தி



எமது சாவகச்சேரி நகர கிராம சேவையாளர் வைத்திலிங்கம் இராசரத்தினம் அவர்களின் அகவை அறுபது விழா மலருக்கு வாழ்த்துசெய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

சேவை தான் இன்பம் மற்ற இன்பம் தேவையில்லை, என் கடன் பணி செய்து கிடப்பதே! என்ற நோக்கோடு எம் மக்களுக்கு 17 வருடங்கள் மனப்பூர்வமாக சேவையாற்றியுள்ளார்.

இவரது தன்னலம் கருதாத சேவையும், நேரம் பார்க்காமல் கடமையாற்றுவதையும் இந் நேரத்தில் பாராட்டாமல் இருக்க முடியாது. அத்துடன் இவர் எமது நகரசபை ஆலோசனைச் சபையின் அங்கத்தவராக இருந்து நல்ல பல ஆலோசனைகளை வழங்கி எமது நகர சபையின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியுள்ளதை இத் தருணத்தில் நினைத்து நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

அத்துடன் 'பிறர் நலம் கருதும் பாண்மையிலே சேவை செய்ய வேண்டும், பிறர் வாழ்க என வாழ்ந்து பெருமை கொள்ளவேண்டும்' என்ற வகையில் வாழ்ந்து இன்று ஓய்வுபெறவிருக்கும் இவரை வாழ்த்துவதோடு இவரது ஓய்வு காலம் சிறப்பானதாகவும் மகிழ்ச்சியாகவும் அமைய மீண்டும் இவரது சேவை நகரசபை மக்களுக்கு ஏதாவது ஒரு வழியில் தேவை எனவும் கூறி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

திருமதி.கு.ஆறுமுகம், செயலாளர், நகரசபை, சாவகச்சேரி.

## வாழ்க வளமுடன்



சாகவச்சேரி நகர் கிராம அலுவலர் வை.இராசரத்தினம் அவர்கள் மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற கூற்றுக்கு ஏற்ப அர்ப்பணிப்புடன் சேவையாற்றி எல்லோர் நன்மதிப்பையும் பெற்றவர்.

அவர் தனது கடமையுடன் பிரிவின் கல்விக்கூடங்கள், வைத்தியசாலை, ஆலயங்கள், கலாசார நிலையங்கள் ஆகிய சமூக சேவைகளிலும் முழு மூச்சாகப் பங்காற்றினர்.

இவரின் ஓய்வுகாலம் சிறந்து விளங்க இறையருளைப் பிராத்திக்கின்றேன்.

ப.நடராசா, ஒய்வுபெற்ற உயர்நீதிமன்றப் பதிவாளர், ச.நீ.

## சேவையின் மேலானவன்



கிராம அலுவலராக கடமையாற்றிய வை.இராசரத்தினம் அவர்கள் சாவகச்சேரி நகர் மக்களுக்கும் சாவகச்சேரி நகர் வணிகர்களுக்கும் 17 வருடங்கள் கடமையாற்றி 09.02.2008 ஓய்வுபெறுகின்றார் என்றால் எம்மால் நம்ப முடியவில்லை. 2001ஆம் ஆண்டு இடம்பெயர்வுக்குப் பின் 2002ஆம் ஆண்டில் எமது முயற்சியால் சாவகச்சேரி நகரில் சிரமதானப் பணிகளை மேற்கொண்ட சமயம் பக்கபலமாகவிருந்து செயலாற்றியதோடு வணிகர்களுக்கு வணிகத்தை ஆரம்பிக்கத் தவறிய ஆவணங்களை திரும்பப் பெறுவதற்கு இரவு பகல் எனப் பாராது சேவையாற்றி ஓய்வு பெறும் ஆசானை நீண்ட காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

செ.சண்முகநாதன், தலைவர், கைத்தொழில் வணிகர் மன்றம், சாவகச்சேரி.

## செயல்வீரன்



மணிவிழா காணுகின்ற எங்கள் நகரின் அன்பு மைந்தன் மக்களின் தொண்டன் சேவா நேசன் வைத்திலிங்கம் இராசரத்தினம் அவர்களை உளமார வாழ்த்துவதில் நானும் நான் சார்ந்திருக்கும் சாவகச்சேரி அரிமாக் கழகத்தினரும் பெருமையடைகின்றோம். பெரு உவகை அடைகிறோம். எமது மாவட்ட ஆளுநர் மேதகு செ.இராகவன் அவர்களின் இந்த வருடத்தின் மகுட வாக்கியமான "சேவை தெய்வீகமானது" என்பதை எல்லா அரிமாக்களுக்கும் சொல்லிலும் செயலிலும் காட்டிவரும் வேளையில் அரிமா அல்லாத நானும் இதே மகுட வாக்கியத்தைத்தான் கடந்து 31 வருடங்களாக வரிந்து கட்டிக் கொண்டேன் என்பதை ஒவ்வொரு செயற்பாட்டின் ஊடாகவும் பிரதிபலித்துக் காட்டிய ஓர் உத்தமர். இவரின் விசுவாசமான சேவையின் பயனை காலம்காலமாக எல்லோராலும் நினைவு கூரத்தக்கதாக அமைந்துள்ளது. எமது மதிப்பிற்குரிய சாவகச்சேரி நகர்க் கிராம அலுவலர் வை.இராசரத்தினம் அவரின் அன்புப் பாரியாராகிய சாவகச்சேரி மகளிர் கல்லூரி உப அதிபர் திருமதி இராசரத்தினம் ருக்மணிதேவி அவர்களும் மேலும் மேலும் சிறப்பாக சமூகத் தொண்டாற்றி மக்கள் நலன் பேணி நிறைவான வாழ்வு பெற வாழ்த்துகிறேன்.

லயன் வா.ஸ்ரீபிரகாஷ், வலயத் தலைவர், வலயம்-15.

## வாழ்த்துவோர்

**லண்டன் கனகதுர்க்கா கணனியகம்,**
சாவகச்சேரி.

**சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபை.**

**அருள்மிகு ஸ்ரீ பழனி ஆண்டவர் பரிபாலன சபை**
சாவகச்சேரி நகர்.

**புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையம்**
சாவகச்சேரி நகர்.

**தென்மராட்சி மக்கள் நலன்சேவைகள் சங்கம்.**

**சாவகச்சேரி நகர் விவசாய சம்மேளனம்**
சாவகச்சேரி.

**அருள்மிகு ஸ்ரீ பழனி அறநெறிப் பாடசாலை**
சாவகச்சேரி.

**சாவகச்சேரி நகர் மகளிர் விவகார அமைப்பு**
சாவகச்சேரி.

**சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்**
சாவகச்சேரி.

**சாவகச்சேரி நகர் சமுர்த்தி சங்கங்கள்**
சாவகச்சேரி.

**ஸ்ரீபழனி சிக்கனக் கடன் உதவும் கூட்டுறவுச் சங்கம்**
சாவகச்சேரி.

**தென்னக தாரகை விளையாட்டுக் கழகம்**
சாவகச்சேரி நகர்.

**சாவகச்சேரி நகர் சிறுவர் விளையாட்டுக் கழகம்**
சாவகச்சேரி.

**சாவகச்சேரி நகர் கிராமிய புனர்வாழ்வுக் குழு**
சாவகச்சேரி.

## சாவகச்சேரி நகர் மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகின்றோம்




எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி சிவரஞ்சினி விஜயகுமாரன்**
அவர்கள் தென்மராட்சி கல்வி வலய
ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகராகப் பதவி
உயர்வு பெற்றமையைப் பாராட்டுகிறோம்.
அவர் மேன்மேலும் பல பதவிகளைப் பெற்று
நீடுழி வாழ வாழ்த்துகின்றோம்.

**யா/நெல்லியடி மெ.மி.த.க.பா.**
**அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகம்.**

(சி/551401)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 18 02 1932 — உதிர்வு 10 01 2008



**அமரர் சுப்பர் மயில்வாகனம்** (கைதடி)
திதி: 09.02.2008

**அன்பான அப்பாவே! ஆருயிர் தெய்வமே! - என்றும் அணையா ஒளியாய் எம் இதயத்தில் வாழ்கின்றீர் எமைவிட்டு நீங்கள் சென்று திங்கள் ஒன்று கடந்தாலும் என்றும் நீர் எம் நெஞ்சில் நீங்காது நிலைத்திருப்பீர்.**

கடந்த 10.01.2008 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம், சுகவீனமுற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த வேளையில், அவருக்குச் சிகிச்சையளித்த வைத்திய சமூகத்தினருக்கும், பராமரித்து உதவிய யாழ்.சென் ஜோன்ஸ் அன்புலன்ஸ் ஊழியர்களுக்கும், அன்னாரின் மறைவுச்செய்தி அறிந்து வெளிநாடுகள் மற்றும் உள்ளூர்களிலிருந்து எம்மைத் தொடர்புகொண்டு அனுதாபம் தெரிவித்தோருக்கும், மரணச்சடங்கில் நேரில் கலந்துகொண்டு பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.இன்று (09.02.2008) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக்கிருத்திய ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"ஈஸ்வரி பவனம்", மானிப்பாய் வீதி,
கைதடி தெற்கு, கைதடி. (70823)

**மக்கள்,**
**மருமக்கள்.**

# மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.9

பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் சி.சிவராஜன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.வடக்குப் பிரதேச செயலர் சு.முரளிதரன் கலந்துகொள்வார். (202)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.9

அராலி இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. அதிபர் வே.மோகனநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் கலந்துகொள்வார். (202)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.9

நீர்வேலி றோ.க.த.க. பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சி.தர்மரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக 'நிக்கொட்' திட்டப் பணிப்பாளர் என்.எஸ்.ஆர்.சிவரூபன் கலந்துகொள்வார். (202)


### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் இறைச்சிக்கோழி தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பாம்**
19, முருகேசர் லேன், நல்லூர். (70893)

### விற்பனைக்கு

MD 90 HONDA விற்பனைக்குண்டு.
தொடர்பு: 77, 3ஆம் ஒழுங்கை,
பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி.
(70891) 0774911793

### கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள் PIRIMA சிவப்பு வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.

- றாஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை
- மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
- திருமகள் களஞ்சியம் - சிவலிங்கப் புளியடி
- சிற்றி பாம் றேடேர்ஸ் - கல்வியங்காடு

**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
#15, Sirambiyadi Lane, Jaffna.021 222 8250
Branch : 167, Kasthuriyar Rd, Jaffna 0777222422

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking
Course Fee : 2000/=

**Diploma in Video Editing**
முன்னணி Video Mixing Software களூடாக
❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter ❖ Capturing
Course Fee : 3000/=


**Diploma in Graphic Designing**
❖ Adobe Photoshop ❖ Corel DRAW ❖ Cool3D Studio ❖ Micro Media Flash
Course Fee : 2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + QuickBooks + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee : 3500/=

வகுப்புக்கள் ஆரம்பம் :11.02.2008 - 09.00AM


## ஆறாம் மாத நினைவலைகள்

மலர்வு 06 12 1922 — உதிர்வு 14 08 2007



**அமரர் சரவணமுத்து சதாசிவம்**
(சாண்டோ மாஸ்ரர் - ஓய்வுபெற்ற அதிபர்)
திதி: 09.02.2008

**உறவெனும் நரம்பறுந்து**
**உயிர் நனைய அழுகின்றோம்**
**ஜோதியிலே கலந்த நீங்கள்**
**மீண்டும் கிடைப்பீர்களா?**

305, ஆனந்த வடலி வீதி,
அரியாலை. (70895)

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**


# யாழ். நகரின் மத்தியில்

09.02.2008

## இன்று குதூகல ஆரம்பம்

# OMAX HOTEL



# ஓமக்ஸ் ஹொட்டேல்



காலை 8.20 சுப நேரத்தில்

அனைத்து புரியாணி வகைகளும்
சிற்றுண்டி வகைகளும்
காலை, மதியம், மாலை
உணவு வகைகளுடன்

இன்று உதயமாகின்றது

குறிப்பு: ஓடர்கள் விஷேடமாகக் கவனிக்கப்படுவதுடன் விலைக்கழிவும் வழங்கப்படும்

372, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்: உதயகுமார் (உதயன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பிரதேசங்களை ஆக்கிரமிப்பது சுலபம் மக்கள் மனங்களை வெல்வது கஷ்டம்

*"பிற தாயக பூமிகளை ஆக்கிரமிப்பதும் கைப்பற்றுவதும் சுலபம். ஆனால் அந்த ஆக்கிரமிப்பின் மூலம் அடிமைப்படுத்தப்பட்ட அந்தத் தேசத்தின் புத்திரர்களின் மனங்களை வெல்வதோ அவர்களின் அபிலாஷைகளை நிறைவு செய்வதோ மிகக் கஷ்டமான காரியம்."*

- அமெரிக்கா தலைமையிலான நேட்டோப் படைகள் ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றி, அங்கு தமது பொம்மை அரசு ஒன்றை நிறுவி, ஆட்சியைக் கொண்டிழுக்க வழி செய்துள்ள போதிலும், ஆப்கான் தேசத்தின் புதல்வர்களை - அவர்களின் மனங்களை - அந்த பொம்மை அரசினாலோ அல்லது அந்த அரசை ஆட்டுவிக்கும் அமெரிக்கா தலைமையிலான மேற்கத்தைய எஜமானர்களினாலோ வெல்லமுடியவில்லை. அவ்விடயம் பற்றிய இன்றைய நிலைமை குறித்து ஆராய்ந்த நிபுணர் ஒருவர் மேற்கண்டவாறு தமது அவதானிப்பை வெளியிட்டார்.

ஆப்கானிஸ்தானையும் சரி, அதற்குப் பின்னர் ஈராக்கையும் சரி, ஆக்கிரமிப்பதற்கு முன்னர் அமெரிக்க ஏகாதிபத்தியம் உரைத்த சூளுரைகளை இப்போது மீட்டுப் பார்க்கும் போதும் அவை பெருவேடிக்கையான விடயங்களாக நமக்குப் படும்.

ஏதோ வெட்டி வீழ்த்தப் போவதுபோல சூளுரைத்துப் பிரகடனங்களை வெளியிட்டு, ஆரவாரமாகப் பாய்ந்த கூட்டுப் படைகள் இப்போது அந்த நாடுகளில் 'மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் துடிப்பதுபோல', ஆக்கிரமித்த பிரதேசங்களைத் தக்க வைத்திருப்பதற்காக அங்கு தங்கவும் முடியாமல், ஆக்கிரமிப்பைக் கைவிட்டு வெளியேறவும் முடியாமல் அந்தரிக்கின்றன; ஆப்பிழுத்த குரங்காய் அல்லற்படுகின்றன.

ஆக்கிரமிப்பு சமயம் அமெரிக்காவுக்கு ஒத்து ஊதிய - நேட்டோவின் கூட்டுப் படைகளில் இடம்பெறுகின்ற - ஏனைய நாடுகள் கூட இப்போது அமெரிக்காவை மெல்லக் கைவிட்டு 'பிச்சை வேண்டாம்; நாயைப் பிடி' என்ற பாணியில் மெல்ல கழர - நழுவ - முயற்சிக்கின்றன.

'உலக பொலிஸ்காரத்தனம்' என்ற சண்டித்தனத்தைக் காட்டிய குற்றத்துக்காக - ஆரவார எடுப்புக் காட்டிய தவறுக்காக - இப்போதும் ஆக்கிரமிப்புப் பிரதேசங்களை விட்டு வெளியேறவும் முடியாமல் அங்கு நிலைகொண்டு இருக்கவும் முடியாமல் அவதிப்படுகின்றது அமெரிக்கா.

அந்நிய மக்கள் கூட்டத்தின் மீது ஆக்கிரமிப்புகளைத் தொடுக்க முயலும் ஆதிக்க சக்திகளுக்கு ஆப்கானும், ஈராக்கும் இன்று நல்ல அனுபவப் பாடங்கள்.

பிரதேசங்களை - பிற தேசங்களை - ஆக்கிரமிப்பது என்பது வேறு. அந்தத் தேசங்களின் மக்களின் மனதை வெல்வது என்பது வேறு.

ஈராக்கையும், ஆப்கானிஸ்தானையும் ஆயுத முனையில் வெ(ற்)றி கொள்ள முடிந்த மேற்கு நாடுகளால் அந்தத் தேசங்களில் அமைதியை ஏற்படுத்த முடியவில்லை. அந்த மக்களின் அபிலாஷைகளை நிறைவு செய்ய முடியவில்லை.

தமது ஆக்கிரமிப்பு மூலம் கவிழ்க்கப்பட்ட ஆட்சிகளை வாய் வீச்சால் தூஷிக்க மட்டுமே அவற்றால் முடிந்தது. அப்போது அவை அவிழ்த்து விட்ட பொய், புளுகுகளை இன்றும் கூட - இன்னும் கூட - உலகம் நம்பத் தயாராக இல்லை.

இந்தப் பாடம் - பட்டறிவு - ஈராக்குக்கும், ஆப்கானிஸ்தானுக்கும் மட்டுமே உரிய விடயங்கள் அல்ல.

இலங்கைக்கும் கூட இது பொருந்தக் கூடியதே.

ஆக்கிரமிப்பு வெறியில் சூளுரைப்பது இலகு. ஆனால் அதனால் ஏற்படும் விளைவுகளை - பெறுபேறுகளை - எதிர்கொள்வது கஷ்டம். அவை விபரீதமானவையாக இருக்கும்.

அமெரிக்காவின் புஷ் அரசு சர்வதேச ஆக்கிரமிப்பு நோக்குடன் ஏற்படுத்திய குளறுபடித்தனம் காரணமாக ஆப்கானிலும், ஈராக்கிலும் சிக்குண்டு, தமது தரப்பிலும் கணிசமானோரை இழந்து, ஆக்கிரமித்த தேசங்களின் புதல்வர்களையும் கொன்றொழித்து, நாசம் பண்ணிவரும் அமெரிக்கப் படைகளை அங்கிருந்து - அதிலிருந்து - மீட்பதற்கு அமெரிக்க ஆட்சித் தலைமையில் ஏற்படும் மாற்றத்துக்காக அமெரிக்காவும், உலகமும் இன்று காத்திருக்க வேண்டியிருக்கின்றது.

இலங்கையும் தனது உள்நாட்டு யுத்தத்தில், இவ்வாறு ஆழம் தெரியாமல் காலை விடுவதுபோல ஆக்கி ரமிப்பு நகர்வுகள் குறித்து சூளுரைத்தபடி இருக்கின்றது. அறிவிப்புகளையும் பிரகடனங்களையும் அதிகாரவர்க்கம் வெளியிடும் பாணி அப்படித்தான் பெரிதும் தோற்றுகின்றன.

அவலப்பட்டு, அல்லல்பட்ட மக்களின் தேசங்களை ஆக்கிரமிப்பதை விடுத்து, அவர்களின் உள்ளங்களை ஆக்கிரமிக்க வேண்டும். பிரதேசங்களை வெல்வதை விடுத்து, மக்களின் மனங்களை வெல்லவேண்டும்.

மக்கள் எழுச்சியை - கிளர்ச்சியை - வெல்வது ஆயுத முனையில் அல்ல. அந்த எழுச்சிக்குக் காரணமான மூலங்களைக் கண்டறிந்து அவற்றிற்கு மருந்து செய்வதன் மூலம்தான்.

உலக வல்லரசான அமெரிக்காவே இதனைத் தனது பட்டறிவுப் பாடமாக இன்று படிக்க வேண்டியதாயிற்று.

இதைப் புரிந்துகொள்ள இயலாமல் இருப்பது அசட்டுத்தனமன்றி வேறில்லை.

உலகப் பொலிஸ்காரத்தனத்துக்கு ஏற்பட்ட அனுபவத்தை இங்கு உள்நாட்டுப் பொலிஸ்காரத்தனமும் பட்டறிய விரும்பினால் அதை யார் தடுக்க முடியும்?

# நோர்வே தமிழ்ப் பாடசாலையின் இருபதாவது ஆண்டு விழா நாளை

ஒஸ்லோ, பெப்.9

நோர்வேயின் பேகன் நகரில் இயங்கும் தமிழ்ச் சிறுவர் பாடசாலையின் இருபதாவது ஆண்டு நிறைவு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெறவுள்ளது.

இந்த விழாவிற்குப் பிரதம விருந்தினராக நோர்வே பெண்மணியான திருமதி இராஜேந்திரன் கலந்து கொள்வார்.

தமிழ் மக்கள் தமது சுய அடையாளத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக குருநகரைச் சேர்ந்த அமரர் இராஜேந்திரன் அவர்களால் கடந்த 20 வருடங்களுக்கு முன்னர் இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகின்றது. அமரர் இராஜேந்திரன் நோர்வேப் பெண் ஒருவரையே மணம் புரிந்திருந்தார்.

இங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் தமது வேலைப் பழுவுக்கு மத்தியிலும் நோர்வே தமிழ்ச் சிறுவர்களின் கல்வியில் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றனர்.

தமிழ், சமயம், பண்பாட்டுக் கல்வி ஆகிய பாடங்கள் இச் சிறுவர் பாடசாலையில் பிரதானமாகக் கற்பிக்கப்படுகின்றன. (50)

## சர்வமத யோகாசன ஸ்தாபகர் காலமானார்

யாழ்ப்பாணம், பெப்.9



அகில இலங்கைச் சர்வமத யோகாசன ஸ்தாபகர் கலாநிதி சுவாமி ஸ்ரீ சிதானந்தசரஸ்வதியோகி கடந்த புதன்கிழமை தனது 90 ஆவது வயதில் காலமானார்.

இவர் 1970 முதல் 1995 வரை யாழ்ப்பாணத்தில் நல்லை ஆதீனத்திலும் நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்திலும் யோகக் கலையை அறிமுகம் செய்து பயிற்றுவித்தவர்.

இவரின் இறுதி நிகழ்வுகள் கடந்த வியாழக்கிழமை கல்முனையில் நடைபெற்றன. (202)

# உயிர் அச்சுறுத்தல் காரணமாக இளம்தாய் பிள்ளைகளுடன் சரண்

யாழ்ப்பாணம், பெப்.9

உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து இளம்தாய், இரண்டு பிள்ளைகள் உட்பட நால்வர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் சரணடைந்துள்ளனர்.

கச்சாய் தெற்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த இளம் தாய் (வயது-33), அவரது மகள் (வயது-11), மகன் (வயது-9) ஆகியோர் நேற்று முன்தினம் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் குடும்பமாகச் சரணடைந்தனர்.

அத்துடன் மீசாலை வடக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த 26 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவரும் நேற்று முன்தினம் சரணடைந்தார்.

இவர்களைப் பாதுகாப்பாகத் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது.

இதேவேளை-

சுன்னாகத்தில் வசித்து வந்த துன்னாலை தெற்கு, கரவெட்டியைச் சேர்ந்த சகோதரங்களான பாலேந்திரன் பிரியதர்சினி (வயது-22), பாலேந்திரன் பிரபாகரன் (வயது-21) ஆகியோர் கடந்த 6 ஆம் திகதி இரவு சுன்னாகத்தில் தமது வீட்டில் இருந்த வேளை இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரவுவேளை வீட்டிற்கு வந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் இவர்களைக் கடத்திச் சென்றதாகப் பெற்றோர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.



*இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் 2007 ஆம் ஆண்டிற்கான 'சூழல் விருது' என்னும் தேசிய விருது யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் உயிரிரசாயனத் துறையின் முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பொன். நவரட்ணத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.*

*அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற சங்கத்தின் வருடாந்த நிகழ்வில் சங்கத்தின் பொதுத் தலைவர் கலாநிதி டபிள்யூ.எல். சுமதிபாலவிடமிருந்து கேடயம், சான்றிதழ், பண முடிப்பு என்பவற்றை கலாநிதி பொன். நவரட்ணம் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். (202)*

# விசேட தேவையுடையோருக்கு வசதிகளை ஏற்படுத்த பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன

யாழ்ப்பாணம், பெப்.9

விசேட தேவையுடையோருக்கு ஏற்படும் சிரமங்களைத் தீர்ப்பதற்கும் சமூகத்தில் பல்வேறு வசதிகளை அவர்கள் பெற்றுக்கொள்வதற்கும் விசேட திட்டங்கள் முன்னெடுக்கப் படவுள்ளன.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வலது குறைந்தோர்களுக்கான தேசிய சபையின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளார்.

சமூகத்தில் விசேட கவனிப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கும் வெளிநாட்டுப் பயணங்களின் போது அந்தந்த நாடுகளில் வசதிகளைப் பெறுவதற்கும் ஏதுவாக நாட்டிலுள்ள சகல விசேட தேவையுடைய நபர்களுக்கும் சர்வதேச மட்டத்தில் ஏற்றுக் கொள்ளக் கூடிய விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

ஆள்பதிவுத் திணைக்களத்தின் மூலம் இந்த அடையாள அட்டைகளை வழங்குவதற்கு அமைச்சரவையின் அனுமதிகளைப் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்த அடையாள அட்டைகளைப் பெற விரும்புபவர்கள் பத்தரமுல்லை, செத்சிறிபாய வளாகத்தில் அமைந்துள்ள அங்கவீனமுற்றவர்களுக்கான தேசிய செயலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் விசேட தேவையுடையோர் அஞ்சல் அலுவலகக் கட்டடங்களுக்குள் பிரவேசிப்பதந்கு வசதிகளை ஏற்படுத்த 10 மில்லியன் ரூபா நிதி அமைச்சரால் ஒதுக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்திலும் 6 அஞ்சல் அலுவலகங்களில் இந்த வசதிகள் செய்யப்படவுள்ளன.

அதே போன்று புகையிரத நிலையங்களுக்குள் இவர்கள் பிரவேசிப்பதற்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்கென 931 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (202)

## நாளை

| | |
|---|---|
| தை - 27 | ஞாயிற்றுக்கிழமை 10.02.2008 |
| திதி : சதுர்த்தி | பின்இரவு 05.48 வரை |
| நட்சத்திரம் : | பூரட்டாதி மு.ப. 08.32 வரை |
| சதுர்த்தி விரதம் | |
| சுபநேரம் : | 09.34 - 11.04 |

# சிந்தனை நாள் வாழ்த்துமடல் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.9

சிந்தனை நாள் வாழ்த்துமடல் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த சிரேஷ்ட சாரணியர், பெண் சாரணியர் மற்றும் சிறு தோழர் போன்றோர் இப்போட்டி நிகழ்வில் கலந்து கொள்கின்றனர். ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் தலா 5 பேர் இந் நிகழ்வில் கலந்துகொள்ள முடியுமென மாவட்ட சாரணிய ஆணையாளர் அறிவித்துள்ளார். (2)

# கலைப்பீட பரீட்சைகள்

யாழ்ப்பாணம், பெப்.9

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட, இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் முதலாம், இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்களுக்கான மீள் பரீட்சைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

அனுமதி அட்டைகளை நேற்று முதல் பெற்றுக் கொள்ளலாம் எனவும்-

நேர அட்டவணையை கலைப் பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் எனவும் கலைப் பீடாதிபதி தெரிவித்தார்.(202)

# சாவகச்சேரிப் பிரதேசத்தில் முத்திரையிடும் பணி

யாழ்ப்பாணம், பெப்.9

சாவகச்சேரி எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களின் - பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சந்தை வியாபாரிகள் உட்பட-நிறுவைகள், அளவைகள், நிறுக்கும் கருவிகள் ஆகியற்றுக்கு முத்திரையிடும் பணி எதிர்வரும் 14ஆம் திகதி தொடக்கம் 19ஆம் திகதி வரை சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைமை அலுவலகத்தில் இடம்பெறுமென யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி அறிவித்துள்ளார். (202-207)

# ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிக்கும் திகதி

யாழ்ப்பாணம், பெப்.9

யாழ்.பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புக்கள் பீடத்தின் 2005/2006 கல்வியாண்டின் முதுகலைமாணி மாணவர்களும் நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமாக் கற்கை நெறி மாணவர்களும் தமது இறுதிப் பரீட்சைக்குரிய ஆய்வுக் கட்டுரைகளை அடுத்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு பீடாதிபதி அறிவித்துள்ளார். (202)

# குறிப்பிட்ட இடங்களில் இன்று மின்தடைப்படும்

யாழ்ப்பாணம், பெப்.9

திருத்த வேலைகள் செய்யும் பொருட்டு இன்று சனிக்கிழமை காலை 8 மணிமுதல் பிற்பகல் 4 மணி வரை குறிப்பிட்ட சில இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபையின் யாழ். அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர்.

சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, அளவெட்டி, தெல்லிப்பழை, பன்னாலை ஆகிய பிரதேசங்களிலேயே மின் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (202-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வல்லுநர் குழு அமைக்க மத்திய அரசிடம் வலியுறுத்துக!

## மாநில அரசைக் கோருகிறார் சரத்குமார்

மதுரை, பெப். 09

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க - அங்கு அமைதி ஏற்படுத்துவதற்கான வழிவகைளை ஆராய வல்லுநர்களைக் கொண்ட குழுவை அமைக்க மத்திய அரசிடம் வலியுறுத்துமாறு தமிழக அரசைக் கோருகின்றார் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சித்தலைவரும் நடிகருமான சரத்குமார்.

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் முதலாவது அரசியல் மாநாடு மதுரையில் நாளை நடைபெறுகிறது. மாநாட்டுப் பணிகளைப் பார்வையிட அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சித் தலைவர் சரத்குமார் நேற்று மதுரை வந்தார். மாநாட்டு மேடை, பந்தல் அனைத்தையும் பார்வையிட்டார். அதைத் தொடர்ந்து அங்குஅவர் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர்கூறியவை வருமாறு:-

''1992ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியை அகற்ற வேண்டும் என்று குரல் கொடுத்தேன். டில்லி மேல்சபை உறுப்பினராக பணியாற்றி இருக்கிறேன். மக்கள் சேவை, சமூக சேவை ஆற்றி வருகிறேன். ஆனால், மற்றவர்கள் சொல்லுகின்ற சில கருத்துகளுக்கு நான் பதில் கூறவிரும்பவில்லை.

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி சாதி, மத, மொழி, இனத்துக்கு அப்பாற்பட்டது. சமுதாயப் பணி ஆற்றுவதே எங்களது லட்சியம். மனித இனம் சிறப்பாக வாழவேண்டும்.

''சேது சமுத்திரத்திட்டத்தையும் அனைவரின் ஒத்துழைப்போடும் சிறப்பாக நிறைவேற்ற வேண்டும். மாற்றுவழி இருந்தாலும் அதைப்பற்றி ஆராய்ந்து அனைவரும் ஒற்றுமையோடு, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். அது குறித்த தீர்மானமும் மாநாட்டில் நிறைவேற்றப்படும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க மத்திய அரசு முயற்சி எடுத்து வருகிறது என நான் நினைக்கிறேன். அங்கு அமைதி நிலவ வேண்டும். அப்படி இல்லாமல் இருந்தால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படும்.

எனவே, அங்கு அமைதி ஏற்பட மாநில அரசு, மத்திய அரசிடம் வல்லுநர்களைக் கொண்ட குழு அமைக்க வலியுறுத்த வேண்டும். இந்தப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்க உரிய வழிகளை அந்தக்குழு ஆராய வேண்டும்.'' - இவ்வாறு அவர் கூறினார்.

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் களம் குடியரசுக் கட்சியின் ரோம்னி விலகல்

வாஷிங்டன், பெப்.09

அமெரிக்க ஜனாதிபதிப் பதவிக்கான வேட்பாளரைத் தேர்வு செய்ய முதல் கட்ட கட்சி வாக்குப்பதிவில் குடியரசு கட்சி சார்பில் ஜோன் மெக்கெய்ன் வெற்றிப் பெற்றதைத் தொடர்ந்து அவரை எதிர்த்துப் போட்டியிட்ட மிட் ரோம்னி போட்டிக்களத்திலிருந்து விலகிக் கொள்கின்றார் என அறிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை 21 மாநிலங்களில் நடைபெற்ற 'சூப்பர் ரியூஸ்டே' வாக்கெடுப்பில் ரோம்னியை பின்னுக்கு தள்ளி மெக்கெய்ன் அதிக வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். இதை தொடர்ந்து தாம் போட்டியிலிருந்து விலகிக் கொள்கின்றார் என ரோம்னி நேற்று முன்தினம் அறிவித்தார்.

ஜனாதிபதிப் பதவிக்கான வேட்பாளராக தாம் தேர்வுபெற தொடர்ந்து போட்டியிட்டால் அது ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடும் ஹிலாரி கிளின்ரன் அல்லது ஒபாமாவுக்கு சாதகமாக மாறிவிடும் என்பதால் மெக்கெய்னுக்கு ஆதரவாக தாம் விலகிக்கொள்கின்றார் என ரோம்னி கூறியுள்ளார்.

# மலேஷியத் தேர்தலில் போட்டியிட இந்திய வம்சாவளித் தலைவர் மறுப்பு

கோலாலம்பூர், பெப்.09

மலேஷியச் சிறையில் இருக்கும் இந்திய வம்சாவழித் தலைவர் பி.உதயகுமார் தேர்தலில் போட்டியிட மறுத்துவிட்டார்.

மலேஷியாவில் உள்ள இந்திய இனத்தவரின் கோரிக்கைகளை புறக்கணிப்பதாகக் போராட்டம் நடத்திய உதயகுமார் உட்பட சிலர் உள்நாட்டு பாதுகாப்புச் சட்டப்படி கைதுசெய்யப்பட்டு விசாரணையின்றி சிறையில் அடைக்கப்பட்டனர்.

மலேஷிய இந்தியன் காங்கிரஸ் தலைவர் சாமிவேலு, மலேஷியாவில் ஆளும் அரசின் கூட்டணியில் இடம்பெற்றுள்ளார். அவர் அங்கு அமைச்சராகவும் இருக்கிறார். இந்திய வம்சாவழியினரின் நலனுக்காக அவர் பாடுபடவில்லை என்ற குற்றச்சாட்டுள்ளது. எனவே, அவருக்கு எதிராகத் தேர்தலில் போட்டியிடுமாறு உதயகுமாரை அவரது ஆதரவாளர்கள் கேட்டுக்கொண்டனர்.

ஆனால், அரசியலில் ஈடுபட விரும்பவில்லை என்று கூறி உதயகுமார் மறுத்துவிட்டாரென ஹிண்ட்ராப் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் தனேந்திரன் தெரிவித்தார்.

# ஈழத்தமிழர் ஆதரவுப் பேரணியை நடத்த தடை விதித்தால் நீதிமன்றத்தை நாடலாம்

## அதற்கு முன்னரான மனுவை நிராகரித்துத் தீர்ப்பு

ஈழத்தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களுக்கு ஆதரவாகவும் தாம் நடத்த எண்ணியிருக்கும் பேரணிக்கு அனுமதி வழங்குமாறு உத்தரவிடக் கோரி பழ.நெடுமாறன் தாக்கல் செய்த மனுவை, அத்தகைய பேரணிக்கு தடை ஏதும் விதிக்கப்படாத நிலையில் பரிசீலிக்க நீதிமன்றம் மறுத்துவிட்டது.

தமிழக தேசிய இயக்கத் தலைவரும், மக்களின் உரிமைக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளருமான பழ.நெடுமாறன் மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் 'ரிட்' மனு ஒன்றை நேற்று முன்தினம் தாக்கல் செய்திருந்தார். அதில் அவர் கூறியிருந்தமை வருமாறு:-

''மலேஷியா மற்றும் இலங்கையில் உள்ள தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்கக்கோரி கடலூரில் 02.02.2008ஆம் திகதி அன்று கூட்டம் நடத்த முடிவு செய்தோம். அதேபோன்று நெல்லையில் எதிர்வரும் 10ஆம் திகதி கூட்டம் நடத்த முடிவு செய்துள்ளோம். தடைசெய்யப்பட்ட அமைப்பை ஆதரித்துப் பேசுவதை அனுமதிக்க முடியாது என்று கூறி கடலூரில் கூட்டம் நடத்த பொலிஸார் அனுமதி மறுத்துவிட்டனர்.

நெல்லையில் நடக்க உள்ள கூட்டத்தைப் பொறுத்தமட்டில் இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு உணவு மற்றும் மருத்துவ வசதி செய்து கொடுக்கவேண்டும், இலங்கைக்கு ஆயுத உதவி செய்யக்கூடாது என்று மத்திய அரசை வலியுறுத்துவதுதான் நோக்கம் ஆகும்.

கடலூரைப் போன்று ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி கூட்டம் நடத்த அனுமதி மறுத்து விடுவார்களோ என்று அச்சம் உள்ளது. கூட்டம் நடத்த அனுமதி மறுப்பது எங்களது பேச்சு உரிமையை பறிக்கும் செயலாகும். எனவே, நெல்லையில் கூட்டம் நடத்த அனுமதி அளிக்க பொலிஸாருக்கு உத்தரவிட வேண்டும்.' - இவ்வாறு மனுவில் கூறப்பட்டு இருந்தது.

இந்த மனு நீதிபதி கே.மோகன்ராம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரித்த நீதிபதி, ''நெல்லையில் கூட்டம் நடத்த அனுமதி கேட்டு மனுதாரர் கொடுத்த மனு மீது பொலிஸ் அதிகாரிகள் எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை.

அப்படிப்பட்ட நிலையில் இந்த மனுவைத் தாக்கல் செய்து இருப்பது சரியல்ல. எனவே, இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. மனுதாரருக்கு அனுமதி மறுக்கப்படும் பட்சத்தில் இந்த நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்ய அதிகாரம் அளிக்கப்படுகிறது'' - என்று உத்தரவிட்டார்.

# பெனாஸிர் சுடப்படவில்லை!

## ஸ்கொட்லண்ட்யாட் பொலிஸாரின் அறிக்கையில் தகவல்

வாஷிங்டன், பெப்.09

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ துப்பாக்கியால் சுடப்பட்டு இறக்கவில்லை என்றும், தற்கொலைப் படையினர் நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலின் அதிர்ச்சி காரணமாகவே உயிரிழந்தார் என்றும் ஸ்கொட்லண்ட்யாட் பொலிஸார் நடத்திய விசாரணையில் தெரியவந்துள்ளதாக அவர்களது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்கொட்லாந்து விசாரணை அதிகாரிகள் கொடுத்த தகவல்களை மேற்கோள்காட்டி 'நியூயோர்க் ரைம்ஸ்' நாளேடு இந்தச் செய்தியை நேற்று வெளியிட்டிருந்தது.

விசாரணை அறிக்கை நேற்று பாகிஸ்தான் அரசிடமும், பெனாசிர் குடும்பத்தினரிடமும் வழங்கப்பட்டது. ஸ்கொட்லண்ட்யாட் பொலிஸாரின் மேற்படி அறிக்கை உத்தியோகபூர்வமாக இன்று அல்லது நாளை வெளியிடப்படலாம் என பாக். அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

பெனாஸிரை நோக்கி துப்பாக்கியால் சுட்ட நபர் பின்னர் வெடிகுண்டை வெடிக்கச் செய்தார் எனவும் அதனால் ஏற்பட்ட அதிர்ச்சி காரணமாக பெனாஸிரின் தலை காரில் மோதி காயம் ஏற்பட்டதில் அவர் உயிரிழந்தார் எனவும் விசாரணை அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாக 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகையின் செய்தி தெரிவிக்கிறது.



பெனாஸிரை நோக்கி இரண்டு நபர்கள் துப்பாக்கியுடன் வந்தார்கள் என முதலில் தெரிவிக்கப்பட்டது. ஆனால், ஸ்கொட்லாந்துப் பொலிஸார் துப்பாக்கியுடன் ஒருவர் மட்டுமே வந்து சுட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே பெனாஸிரின் மரணம் குறித்து ஸ்கொட்லாந்துப் பொலிஸார் தயாரித்துள்ள அறிக்கை பல சந்தேகங்களை எழுப்புவதாகவும் கூறப்படுகிறது.

பெனாசிர் உடல் பிரேத பரிசோதனை செய்யப்படாமலே அடக்கம் செய்யப்பட்டு விட்டது. இந்த நிலையில், எந்த ஆதாரமுமின்றி ஸ்கொட்லாந்துப் பொலிஸார் இந்த முடிவை எப்படி எடுத்தனர் என்று 'ரைம்ஸ்' நாளேடு சந்தேகம் எழுப்பியுள்ளது

# நகரசபைக் கூட்டத்தில் துப்பாக்கிதாரி தாக்குதல் மிசூரியில் ஐந்து பேர் பலி; நகர மேயர் காயம்

லூயிஸ், பெப்.09

அமெரிக்காவின் மிசூரியிலுள்ள லூயிஸ் நகரில் நகரசபைக் கூட்டமொன்றில் துப்பாக்கிதாரியொருவர் மேற்கொண்ட தாக்குதலில் ஐவர் கொல்லப்பட்டுள்ளனர். நகரசபைக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் நகரசபைக்கூட்டம் ஆரம்பித்த பின்னர் துப்பாக்கியுடன் உள்ளே நுழைந்த அந்த நபர் மேயரை சுட்டுக் கொல்லுங்கள் என்று கத்தியவாறு துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார். நகரசபைக் கட்டடத்திற்கு வெளியே ஒருவரை சுட்டுக்கொன்ற பின்னரே அவர் உள்ளே நுழைந்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

சபைக்கூட்டம் 30 பேருடன் காலையில் ஆரம்பமான பின்னர் அந்த நபர் உள்ளே நுழைந்துள்ளார்.

துப்பாக்கிதாரி மேற்கொண்ட சராமாரியான சூட்டுக்கு இலக்காகி நகரபிதா மைக்ஸ்வோடோடா காயமடைந்துள்ளார். நகரின் சட்டமா அதிபர் மீதும் குறிப்பிட்ட நபர் தாக்குதலை மேற்கொண்டுள்ளார். எனினும் அவர் காயங்கள் எதுவுமின்றி உயிர் தப்பினார்.

தொரென்டன் எனும் நபரே இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டவர் எனவும் இவர் கடந்த காலங்களில் நகரசபைக் கூட்டங்களைக் குழப்பி வந்தார் எனவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உலக அரங்கில்**

# விமானியைக் கத்தியால் குத்திய பின்னர் விமானத்தைக் கடத்த முயன்ற பெண் கைது

## பயணிகள் மடக்கிப் பிடித்தனர்

வெலிங்டன், பெப்.09

விமானியைக் கத்தியால் குத்திய பின்னர் விமானத்தைக் கடத்த முயன்ற பெண்ணொருவர் பயணிகளால் மடக்கிப் பிடிக்கப்பட்ட சம்பவம் நேற்று நியூஸிலாந்தில் நிகழ்ந்துள்ளது.

நியூஸிலாந்து நாட்டின் பிளன்ஹீன் நகரில் இருந்து கிறிஸ்ற்சேர்ச் நகருக்கு ஒரு சிறிய விமானம் புறப்பட்டு சென்றது. அந்த விமானத்தில் 19 பயணிகள் மட்டுமே இருந்தனர்.

நடுவானில் விமானம் பறந்து கொண்டிருக்கும் போது ஒரு பெண் எழுந்து விமானியின் அருகே சென்றார். விமானத்தைக் கடத்த அந்தபெண் முயன்றார். வேறு திசையில் ஓட்டும்படி விமானியை அந்த பெண் மிரட்டினார். தன்னிடம் வெடிகுண்டு இருப்பதாகவும் விமானத்தை தகர்க்கப் போகின்றார் எனவும் அந்தப் பெண் மிரட்டினார்.

ஆனால், மிரட்டலுக்கு விமானி பணியாததால் அந்த பெண் கத்தியால் விமானியைக் குத்தினார். இதைப் பார்த்ததும் பயணிகள் அதிர்ச்சியடைந்தனர். திடீரென்று பயணிகள் அனைவரும் எழுந்து வந்து அந்தப் பெண் பயணியை மடக்கிப் பிடித்தனர்.

இரத்தம் சொட்டச்சொட்ட அந்த விமானி கிறிஸ்ற்சேர்ச் விமான நிலையத்தில் விமானத்தைப் பத்திரமாகத் தரையிறக்கினர். அந்தப் பெண்ணை பொலிஸார் கைது செய்து விமானத்தைக் கடத்த முயன்றது ஏன் என்பது குறித்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# புகையிலையால் வரும் நோயால் இந்த நூற்றாண்டில் 100 கோடி பேர் மரணிப்பர்

## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

நியூயோர்க், பெப்.09

புகையிலையைப் பயன்படுத்துவதால் வரும் நோய்களுக்கு இந்த நூற்றாண்டில் சுமார் 100 கோடி பேர் உயிரிழப்பார்கள் என உலக சுகாதார அமைப்பு நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பீடி, சிகரெட் உள்ளிட்ட பல்வேறு புகையிலைத் தயாரிப்புகளை மக்கள் பயன்படுத்துவதைக் குறைக்க அரசுகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் பலியாவோர் எண்ணிக்கையும் குறைய வாய்ப்பில்லை எனவும் அந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

புகையிலைத் தயாரிப்புகளுக்கு விதிக்கப்படும் வரிகள் மூலம் உலக நாடுகளுக்கு ஆண்டு தோறும் ரூபா 24 லட்சம் கோடிக்கும் அதிகமாக வருவாய் கிடைத்தாலும் அதில் ஒரு சதவீதத்துக்கும் குறைவான பணமே புகையிலைப் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்காக பயன்படுத்தப்படுகிறது என்றும் அந்த அறிக்கை கவலை தெரிவித்துள்ளது.

இதுகுறித்துக் கருத்து வெளியிட்ட உலக சுகாதார அமைப்பின் பொதுச்செயலர் டாக்டர் மார்க்கரெட் ஜான்-

''ஆண்கள், பெண் [illegible] 100 கோடி பேரின் உயிரைக் காப்பதற்கான தீர்வு நமது கையில்தான் உள்ளது.'' - என்றார்.


''இந்த நோயால் உயிரிழப்புகள் ஏற்படுவதைத் தடுப்பதற்கு தடுப்பு மருந்தோ சிகிச்சையோ இல்லை. ஆனால், அரசுகள் மற்றும் சமூக அமைப்புகள் நினைத்தால் இதைச் சாதிக்க முடியும்.'' -என்றும் அவர் வலியுறுத்தினார்.

இளைய சமூகத்தினர் புகைப் பிடிக்கத் தொடங்குவதைத் தடுப்பது மற்றும் புகைப் [illegible] பழக்கத்திலிருந்து விடுபடச் [illegible] முயற்சிகளைத் தீவிரப் படுத்துமாறு உலக நாடுகளுக்கு உலக சுகாதார அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிளிறினார் பிராக்கன் சுருண்டது இலங்கை

## 128 ஓட்டங்களால் ஆஸி. வெற்றி


ஜெயசூரியாவை 'போல்ட்' ஆக்கிய ஆர்ப்பரிப்பில் பிரட் லீ.

சிட்னி,பெப்.09

ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக நேற்று நடந்த முத்தரப்புத் தொடரின் 3ஆவது போட்டியில் நதன் பிராக்கன் பந்துவீச்சில் அசத்த இலங்கை அணி 125 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதன் மூலம் ஆஸ்திரேலியா 128 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியைப் பதிவுசெய்தது.

ஆஸ்திரேலியா, இலங்கை, இந்தியா ஆகிய அணிகள் பங்கேற்றுவரும் கொமன்வெல்த் பாங்க் முத்தரப்புத் தொடர் ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவருகின்றது. தொடரின் 3ஆவது போட்டியான ஆஸ்திரேலியா, இலங்கை அணிகளுக்கிடையிலான மோதல் சிட்னியில் நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது.

தொடக்க வீரர்களான கில்கிறிஸ்ற், மத்தியூ ஹைடன் ஆகியோர் அணிக்கு சிறந்த அடித்தளத்தை அமைத்துக்கொடுத்தனர். இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்காக 65 ஓட்டங்களைச் சேர்த்தது. இந்நிலையில் மத்தியூ ஹைடன் 42 ஓட்டங்களுடன் அமரசிங்கவின் பந்துவீச்சில் ஜெயவர்த்தனவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து களமிறங்கிய பொண்டிங் 9 ஓட்டங்களுடன் வாஸின் வேகத்தில் ஜெயவர்த்தனவிடம் பிடிகொடுத்து பவிலியன் திரும்பினார்.

மறுமுனையில் அதிரடியாக ஆடிய கில்கிறிஸ்ற் அரைச்சதம் அடித்து அசத்தினார். இவர் 61 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது கப்புகெதரவின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ. ஆனார். தொடர்ந்து வந்த மைக்கல் கிளார்க் சிறப்பாக ஆடி ஓட்டங்களைக் குவித்தார். எனினும், மறுமுனையில் வந்த வீரர்கள் விரைவாக வெளியேறினர். சைமண்ஸ் (12), மைக் ஹசே (10), ஜேம்ஸ் ஹோப்ஸ் (34) என அடுத்தடுத்து ஆட்டமிழந்து ஏமாற்றினர்.

இறுதிவரை ஆட்டமிழக்காமலிருந்து மைக்கல் கிளார்க் 86 பந்துகளில் 2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட 77 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் ஆஸ்திரேலிய அணி 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 253 ஓட்டங்களைச் சேர்த்தது.

இலங்கை அணியின் பந்துவீச்சில் வாஸ், அமரசிங்க ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், மலிங்க, கப்புகெதர ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதைத் தொடர்ந்து 254 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்ததால் 31.3 ஓவர்களில் 125 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 128 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

ஆரம்ப வீரரான தரங்க 10 ஓட்டங்களுடன் பிராக்கனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். மற்றைய ஆரம்ப வீரரான சனத் ஜெயசூரியா வெறும் 7 ஓட்டங்களுடன் பிரட் லீயின் வேகத்தில் 'போல்ட்' ஆனார். தொடர்ந்து வந்த வீரர்களான மஹேல (6), சமர சில்வா (7), டில்சான் (14), கப்புகெதர (0), வாஸ் (18), மலிங்க (2), முரளிதரன் (11) என விரைவாக விக்கெட்டைப் பறிகொடுத்து பவிலியன் திரும்பினர்.

சங்ககாரா மட்டுமே அதிரடியாக விளையாடி 41 பந்துகளில் 42 ஓட்டங்களை எடுத்து பிராக்கனின் வேகத்தில் எல்.பி.டபிள்யூ. ஆனார்.

ஆஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சாளர் பிராக்கன் 8.3 ஓவர்கள் வீசி 47 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தி அணியின் வெற்றிக்கு உதவினார். ஆட்டநாயகன் விருது அவருக்கே வழங்கப்பட்டது.

# கிரிக்கெட்டிலிருந்து காஸ்பரோவிச் ஓய்வு

சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுகின்றார் என ஆஸ்திரேலிய வேகப் பந்துவீச்சாளர் மைக்கல் காஸ்பரோவிச் அறிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் முக்கிய வேகப் பந்து வீச்சாளர்களில் காஸ்பரோவிச்சும் ஒருவர். தொடர்ந்து காயங்களால் அவதிப்பட்டு வந்த இவர் அணியில் இடம்பிடிக்க முடியாமல் தவித்தார். ஆஸ்திரேலியாவின் தேசிய அணிக்கான ஒப்பந்தத்தில் இடம் பிடித்திருந்த இவர் இவ்வாய்ப்பை கடந்தாண்டு தவறவிட்டார். தற்போது 36 வயதான இவர் இதுவரை 38 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி, 113 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். 43 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்று 67 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

ஓய்வு குறித்து காஸ்பரோவிச் கூறுகையில், ''இளம் வீரர்களுக்கு வழிவிடுவதற்காக இம்முடிவை எடுத்தேன். ஓய்வுபெற இது சரியான தருணம் எனக் கருதுகிறேன்.'' - என்றார்.

# மன அழுத்தத்திலிருந்து விடுதலை பெற பக்திப் பாடல் கேட்கும் இந்திய வீரர்கள்

மெல்போர்ண்,பெப்.09

நெருக்கடியான நேரங்களில் இந்தியக் கிரிக்கெட் வீரர்களுக்கு மன அழுத்தம் ஏற்பட்டு விடுவது வாடிக்கையான ஒன்று. இதனாலேயே பல போட்டிகளில் வெற்றியை கோட்டை விட்டு உள்ளனர். இதைத் தடுக்க எத்தனையோ வித பயிற்சி அளித்தும் கூட அதற்கு போதிய பலன் கிட்டவில்லை.

இப்போது ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து வரும் இந்திய வீரர்கள் மன அழுத்தத்தைப் போக்கவும், மனதை ஒரு நிலைப்படுத்தவும் புதிய நடைமுறையை கையாண்டு வருகிறார்கள்.

அதாவது பக்தி பாடல் மற்றும் வேத சுலோகங்களை கேட்டு மனதை ஒரு நிலைப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதற்காக லதா மங்கேஷ்கர், அனுப் ஜலோதா போன்றவர்களின் பக்திப் பாடல் மற்றும் சுலோகங்கள் அடங்கிய சி.டியை வீரர்கள் வாங்கி வைத்துள்ளனர். போட்டி தொடங்குவதற்கு முன்பு அனைவரும் ஒன்றாக அமர்ந்து இவற்றை கேட்டு வருகின்றனராம். சீக்கிய மதத்தவரான ஹர்பஜன்சிங் சீக்கிய புனித நூலான குரு கிராந்த் சாகிப் புத்தகத்தை படிப்பதுடன் பக்திப் பாடல்களையும் கேட்டு வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# டெண்டுல்கருக்கு எதிராக வார்த்தை மோதல் வேண்டாம்

**ஷேன் வோர்ன் வேண்டுகோள்**

சிட்னி, பெப்.09

சச்சினுக்கு எதிராக வார்த்தைப் போரில் ஈடுபடக் கூடாது என ஆஸ்திரேலிய சுழல் ஜாம்பவான் ஷேன் வோர்ன் சக வீரர்களிடம் வேண்டியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், ''போட்டிகளின் போது வார்த்தைப் போர் முக்கியம். இதனைத் தடுமாறும் துடுப்பாட்ட வீரர்களுக்கு எதிராகக் கையாளலாம். ஆனால் சச்சின், லாரா போன்ற தலைசிறந்த வீரர்களுக்கு எதிராகப் பயன்படுத்தக் கூடாது. நட்புடன் பழகி அவர்களைப் புன்னகைக்கச் செய்ய வேண்டும். ஹர்பஜன் இனவெறி விவகாரம் தொடர்பாக கருத்து சொல்லும் நிலையில் நான் இல்லை.'' - என்றார்.

## நியூஸி. - இங்கிலாந்து ஒருநாள் தொடர் இன்று

நியூஸிலாந்து, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடர் இன்று ஆரம்பமாகின்றது. தொடரின் முதலாவது போட்டி இன்று வெலிங்டனில் நடைபெறுகிறது.

ஏற்கனவே நடைபெற்ற ருவென்ரி/ 20 தொடரை இங்கிலாந்து வென்றிருந்தமை தெரிந்ததே.


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 15 . 06 . 1931



மறைவு 10 . 01 . 2008

அமரர் **ஞானப்பூங்கோதை சிவகுரு**

(V.S.S.K உரிமையாளர்)

அன்பாலும் அறத்தாலும் பண்பாலும் பாசத்தாலும்
தெய்வ அருளாலும் அரவணைத்து எம்சீரிய
வாழ்விற்கு வழிகாட்டிய எங்கள்
அன்புத்தாயை எம் இதயக்கோயிலில்
வைத்துப் பூசித்து வணங்குகின்றோம்.

உங்கள் நினைவில்
மக்கள்,மருமக்கள்,சகோதரர்,
பேரப்பிள்ளைகள்,பூட்டப்பிள்ளைகள்

இணுவில் தெற்கு,
இணுவில்.

## யாழ்ப்பாணம் வணிகர் கழகம்
## கணக்குப்பதியுநர்/ கணனி தட்டெழுத்தாளர்

மேற்படி பதவி வெற்றிடங்களிற்கு க.பொ.த.பூர்த்தி செய்த, கணக்குப் பதிவு/ கணனித் தட்டெழுத்து மற்றும் ஆங்கில அறிவுள்ள பெண் விண்ணப்பதாரர்கள் தேவை.

**விண்ணப்பங்கள் 18.02.2008 இற்கு முன் ஏற்றுக்கொள்ளப்படும்.**

165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/551405)

யாழ்ப்பாணம் வணிகர்
கழகம்.

## விற்பனைக்கு

வெள்ளை நிற பொமேநேரியன் நாய்க்
குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

யாழ்ப்பாணம். தொ.பே. 0779122972


# மரண அறிவித்தல்கள்

## சிவஞானம் சிவகுமாரன்(நோர்வே)



(முன்னாள் கட்டட மேற்பார்வையாளர் - விமான நிலையம், இலங்கை)

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வாழ்பதியாகக் கொண்டவரும் தற்போது நோர்வேயில் வசித்தவருமான சிவஞானம் சிவகுமாரன் நோர்வேயில் நேற்று(08.02.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவகபிலனின் பாசமிகு தந்தையும் சிவஞானம் (பிரதம சிறாப்பர்)- மங்கையர்க்கரசி(கனடா) தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற சோமசுந்தரம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் சிவநேசன்(ஜேர்மனி), சிவராம் (பதிவாளர், நீதிமன்றம்), சிவசங்கர்(கனடா), சிவதாஸ்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் நல்லினி, நாகேஸ்வரி, ஜெகதீஸ்வரி, காலஞ்சென்றவர்களான P.சறோஜினிதேவி, பாலச்சந்திரன், குகதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கணேசலிங்கம்J.P. (இளைப்பாறிய வங்கிச் சேவை முகாமையாளர்) அவர்களின் மருமகனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 12.02.2008 செவ்வாய்கிழமை நோர்வேயில் நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P: 004722250757
(Norway)

தகவல்:
சிவராம்(சகோதரர்)
கற்பகப்பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

## தம்பிப்பிள்ளை பரமேஸ்வரி



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை பரமேஸ்வரி 07.02.2008 வியாழக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் - சுந்தரம் தம்பதியரின் அன்பு மகளும் கணபதிப்பிள்ளை - கண்மணி தம்பதியரின் மருமகளும் தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும் தர்மசீலன்(கனடா), குணசீலன்(பொறியியலாளர், இலங்கை மின்சார சபை - வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற தம்பிராஜா, கனகராஜா(பிரான்ஸ்), புனிதம்மா, சரோஜினிதேவி, சீதாதேவி, வரதராஜா(கனடா), பத்மாவதி(கொழும்பு), புவனேந்திரராஜா(கனடா), ராஜ்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இந்துமதி(கனடா), ஆனந்தரஜனி(தேசிய சேமிப்பு வங்கி, வவுனியா) ஆகியோரின் மாமியாரும் தேசிகன், கௌசிகன், ஆரோகணன், அருணோதயன், அகிலேஷன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.02.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

178/5, முதலாம் ஒழுங்கை,
குட்செட் வீதி, தோணிக்கல்,
வவுனியா. 024 2222750

தகவல்:
சகோதரிகள்
04, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி,
அரியாலை. 021 222 9068

## கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை



(மேசன் கொன்ராக்ரர்)

கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை 08-02-2008 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை -புத்தாச்சி தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற ந.மனோன்மணி க.ஐயாத்துரை, தெ.இராசமணி மற்றும் செ.பவளம்மா, பாலசிங்கம் ஆகியோரின் சகோதரனும் நகுலேஸ்வரி, லஸ்தலேஸ்வரி, விக்னேஸ்வரி ஆகியோரின் தகப்பனாரும் சிவராசா, நடேசநாதன், பாலமுரளிகிருஸ்ணா ஆகியோரின் மாமனும் சதீஸியா, பாரதி ஆகியோரின் பேரனுமாவார்

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2008) சனிக்கிழமை 2ஆம் குறுக்கு வீதி, கொழும்புத்துறையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 12.30 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கொழும்புத்துறை துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.15, 2 ஆம் குறுக்கு வீதி,
கொழும்புத்துறை.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை செல்லவேண்டாம் என்று பிரிட்டன் மீண்டும் எச்சரிக்கிறது

கொழும்பு,பெப்.09

இலங்கையில் மீண்டும் வன்முறைகள் தீவிரமடைந்துள்ளதையடுத்து அந்நாட்டில் பயணம் மேற்கொள்வது தொடர்பாக பிரிட்டன் மீண்டும் தனது பிரஜைகளுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கின்றது.

இலங்கையில் பயங்கரவாதத்தின் உயர்மட்ட அச்சுறுத்தல் காணப்படுகின்றது. அங்கு உயிர்களைப் பலி கொள்ளும் தாக்குதல்கள் 2008 இல் அதிகரித்துள்ளன என பிரிட்டன் அந்த எச்சரிக்கையில் தெரிவித்துள்ளது.

கொழும்பிலும் இலங்கை முழுவதிலும் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக வெளிநாட்டுப் பயணிகளும் வெளிநாட்டில் வாழும் இலங்கையர்களும் செல்லும் பகுதிகளில் இவை இடம்பெற்றுள்ளன. இத்தகைய தாக்குதல்கள் மேலும் நடைபெறலாம் - என்றுஅந்தப் பிரயாண எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான தாக்குதல்களில் பிரிட்டன் பிரஜைகள் சிக்கும் அபாயம் உள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கும், யாலை தேசிய பூங்காவிற்கும் செல்வதைத் தவிர்க்குமாறும் பிரிட்டிஷ் பிரஜைகளை அந்த அறிவிப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

இலங்கையில் அரச, இராணுவ, துணைப்படைகளின் அலுவலகங்களுக்கு அருகில் செல்வதைத் தவிர்க்கும்படியும் -

இவையே அடிக்கடி தாக்குதலுக்கு உள்ளாகும் இடங்கள் எனவும் -

அதில் மேலும் கூறப்பட்டுள்ளது. (உ)

## விளையாட்டு அதிகாரி றொஹான் காலமானார்

கொழும்பு, பெப். 09

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரி இராசநாயகம் றொஹான் இராஜசிங்கம் (வயது - 50) நேற்றுச் சென்னையில் காலமானார்.

சில காலமாக புற்றுநோயால் பீடிக்கப்பட்டிருந்த இவர் சென்னையில் சிகிச்சை பெற்றுவந்தார். சிகிச்சை பயன் அளிக்காத நிலையில் நேற்று அங்கு மரணமானார்.

யாழ். மாவட்ட 'விளையாட்டு அதிகாரியாக முன்னர் பணியாற்றி வந்த இவர் புகழ் பூத்த விளையாட்டு வீரராவார். தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த இவரின் இறுதிக் கிரியை சென்னையில் நடைபெறும்.

## இராணுவத்தினருக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும் நோக்குடன் புதிய படைப்பிரிவாக 61 ஆவது டிவிஷனை உருவாக்கத் திட்டமிட்டிருக்கிறது. அதற்கான பயிற்சிகள் தற்போது முழு வீச்சில் இடம்பெற்று வருகின்றன.

இருப்பினும், இந்தப் புதிய பிரிவின் கட்டளைத் தளபதி மற்றும் தலைமையகம் அமையும் இடம் போன்ற விடயங்கள் இது வரை முடிவு செய்யப்படவில்லை.

இராணுவத்தினருக்கு மேலும் படையினரைச் சேர்க்கும் முயற்சிகளும் தற்போது மும்முரமாக இடம்பெற்று வருகின்றன. கடந்த வருடம் முப்பதாயிரம் சிங்கள இளைஞர்கள் புதிதாக இராணுவத்தில் இணைந்துள்ளனர். இந்த வருடம் மேலும் பதினையாயிரம் பேரை இராணுவத்தில் சேர்க்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது - என்றும் இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

கடந்த வருடத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட 57 ஆவது, 58 ஆவது, 59 ஆவது படையணிகள் வவுனியா, மன்னார், வெலிஓயா ஆகிய பகுதிகளில் நிலைகொண்டு செயற்பட்டு வருகின்றன.

இவை தவிர, இயந்திர இலகு காலாட் படை, 9 ஆவது கவசப் படையணி உட்பட புதிய ரெஜிமெண்ட் அணிகளும் களத்தில் இறக்கப்பட்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (உ-03)

## மன்னார் அடம்பனில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பற்றியுள்ளதாக பாதுகாப்புத் தரப்பு அறிவித்தது.

இந்தச் சண்டையில் தமது தரப்பில் 2 படையினர் கொல்லப்பட்டிருப்பதாகவும், 5 இராணுவத்தினர் காயமடைந்திருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்தது.

இராணுவத்தினர் தாங்கள் கைப்பற்றிய பிரதேசத்தில் நிலைகளைப் பலப்படுத்தி வருவதாகவும், இந்தத் தாக்குதலில் 12 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டிருப்பதாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார கூறினார்.

தாம் முன்னேறிச் சென்ற விடுதலைப் புலிகளின் முன்னரங்கப் பகுதிகளில் நிலைகொண்டுவிட்டதாக இராணுவத் தரப்பினர் வெளியிட்ட பிந்திய தகவலில் தெரிவிக்கப்பட்டது. (அ)

## தமிழ் வர்த்தகர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொட்டாஞ்சேனையில் உள்ள லூஸியாஸ் தேவாலய வீதியூடாகத் தனது மனைவியுடன் வாகனத்தில் சென்றுகொண்டிருந்த வேளை மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளந் தெரியாத ஆயுததாரிகள் இவர்கள் மீது சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்போது, அவரது மனைவி உமாதேவி படுகாயமடைந்தார் என்றும் அவர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் கூறப்பட்டது. குறிப்பிட்ட வர்த்தகர் கொழும்பு, ஸ்ரீ கதிரேசன் வீதியில் வீரமைலன் என்ற திருமண மண்டபம் ஒன்றை நடத்தி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் தொடர்பான மக்கள் கண்காணிப்புக் குழுவின் கூட்டங்களும் மாநாடுகளும் இவரது வீரமைலன் மண்டபத்திலேயே நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.


SHARP

SHARP - SF - 126 ST
TONER(ORIGINAL) - 2550/=
சகல வகையான போட்டோ பிரதி இயந்திர ரோணர் வகைகள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
COM - e,
222. K.K.S. Road, Jaffna.
0776-271500

CHEMISTRY
S.Vasu B.sc
2010 A/L
அடைப்படை இரசாயனவியல்
sat, sun 4-5 p.m
ஆரம்பம் 09.02.2008
(இன்று)
NAVALAR
Jaffna.

கற்சூரி வினாத்தாள்
★ தரம் 1, 2, 3 (5) பாடங்கள் அடங்கிய வினாத்தாள்கள்.
★ தரம் 3 முதல் O/L வரை கணித பாட வினாத்தாள்கள்.
★ தரம் 5 புலமைப் பரிசில் விசேட வினாத்தாள்.
★ தூர இடங்களிற்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.
★ குறிப்பு:- எமது நிறுவனத்தில் மட்டுமே பெறலாம்.
கற்சூரி கல்வி நிறுவனம்
166, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:76510149


# பத்திரிகையாளர்களுக்கு ஆபத்தான நாடுகளில் 3ஆம் இடம் இலங்கைக்கு!

கொழும்பு,பெப்.09

பத்திரிகையாளர்களுக்கு உலகில் ஆபத்தான நாடுகளில் மூன்றாவது இடத்தில் இலங்கை விளங்குவதாக சர்வதேச பத்திரிகை ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

2007 இல் உலகளாவிய ரீதியில் கொல்லப்பட்ட பத்திரிகையாளர்கள் குறித்த அதன் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஈராக்கில் 44 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டனர் எனவும் இதற்கு அடுத்ததாக சோமாலியர்வில் எட்டுப் பேரும், இலங்கையில் ஆறு பத்திரிகையாளர்களும் பலியாகினர் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர்கள் திட்டமிடப்பட்ட குற்றச் செயல்களான போதைப் பொருள் கடத்தல் மற்றும் ஊழல் போன்ற செய்திகளைச் சேகரித்தமைக்காகவே அதிக எண்ணிக்கையில் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ள அந்த அமைப்பு, பத்திரிகையாளர்கள் கொலைகள் தொடர்பாகக் குற்றம் இழைத்தோர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டமை குறைவு என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.(உ)

## கடற்படையினர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூழ்கடிக்கப்பட்டிருப்பதாக தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையம் குறிப்பிட்டிருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் தொடர்பாடல் பிரிவு மூலம் இந்தத் தகவல் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகவும் ஊடக மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை-

தனங்களப்புப் பகுதியில் கடற்படையினருடன் மோதல் ஒன்று இடம்பெற்றது என்றும் அம்மோதலில் கடற்படையின் இரு காவலரண்கள் தாக்கி எரிக்கப்பட்டன என்றும் விடுதலைப் புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மோதலில் 40 குதிரை வலுக் கொண்ட இயந்திரத்தில் இயங்கும் படகு ஒன்றை மீட்டதாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். (அ-1)

## விடுதலைப் புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவைக்கு அளித்துள்ள பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போது இடம்பெறும் யுத்தம் தொடரும். விடுதலைப் புலிகள் ஒருபோதும் பின்வாங்க மாட்டார்கள், அவர்களுடைய பகுதிகளை இராணுவம் கைப்பற்றினால் கூட அவர்கள் தொடர்ந்து போரிடுவார்கள்.

விடுதலைப் புலிகளின் பகுதிகளைக் கைப்பற்றுவது அரசிற்கு அவ்வளவு சுலபமாக இருக்காது.

அரசு விடுதலைப் புலிகளைப் பத்து வருடத்திற்கு முன்னரே அழிக்க நினைத்தது. ஆனால் முடியவில்லை. பத்து வருடங்களாக இயலாதது இன்றும் சாத்தியமாகாது. விடுதலைப் புலிகள் இன்று இராணுவ ரீதியில் மிகவும் பலமாக உள்ளனர்.

இலங்கையில் அதிகரித்துவரும் வன்முறைகள் தமிழ் மக்கள் அனுபவித்துவரும் முடிவற்ற துயரத்தை மேலும் அதிகரித்துள்ளது - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-உ)

## திருமலை பேராறில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும் இடையில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற மோதலின் பின்னர் கடற்படையினர் மேற்கொண்ட தேடுதலின்போது விடுதலைப் புலிகளின் இரு சடலங்களை மீட்டுள்ளனர் என்றும், இரு கிளைமோர்கள், இரு ரி - 56 ரகத் துப்பாக்கிகள், இரு நிலக்கண்ணிவெடிகள் மற்றும் பலதரப்பட்ட மகஸின்களையும் அவர்கள் அங்கிருந்து கைப்பற்றியிருந்தனர் என்றும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## 13ஆவது திருத்தம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டில்லி அதிகார வர்க்கம் தெரிவித்திருப்பதாக நம்பகமாக அறியப்படுகின்றது.

இலங்கை - இந்திய ஒப்பந்த ஏற்பாடுகளுக்குச் சட்ட வடிவம் கொடுக்கும் முயற்சியாக 1988 இல் அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது. எனினும், அதில் உள்ள ஒழுங்குகளுக்கு அமைவான அதிகாரப் பகிர்வுகள் இன்னும் நடைமுறைப்படுத்தப்படவேயில்லை.

இந்நிலையில், இந்த 13 ஆவது திருத்த ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தப் போவதான அறிவிப்பு ஒன்றை அரசாங்கம் அண்மையில் விடுத்தது.

எனினும் 13 ஆவது திருத்தத்தில் கூறப்பட்டுள்ள சட்ட - ஒழுங்கு விவகாரம், பொலிஸ் நிர்வாகம், உயர் கல்வி, காணி, பெருந்தெருக்கள் போன்ற முக்கிய துறைகளுக்கான அதிகாரங்களை மாகாணங்களுக்குப் பகிர்ந்தளிக்கும் எண்ணம் கொழும்பு அரசுத் தலைமைக்கு இல்லவே இல்லை என்று உறுதியான தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

இந்தப் பின்னணியிலேயே, அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்தும் அரசின் அறிவிப்பு எவ்வளவு தூரத்துக்கு செயல்வடிவம் பெறுகின்றது என்பதை ஊன்றிக் கவனிக்கப் புதுடில்லி முடிவு செய்திருப்பது பற்றிய தகவல் வெளியாகியிருக்கின்றது.

கடந்த வாரம் இந்தியா சென்றிருந்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அங்கு புதுடில்லியில் பிரதமர் மன்மோகன்சிங்கின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் உட்பட அரச உயர் மட்டத்தில் பலரையும் சந்தித்துப் பேசியிருக்கின்றார்.

அப்போது, மேற்படி அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் கொழும்பின் திடீர்த் தீர்மானம் தொடர்பாக ஐ.தே.கட்சியின் நிலைப்பாட்டை புதுடில்லி உயர் வட்டாரங்கள் கேட்டறிந்தன என்றும் தெரிகின்றது.

பதின்மூன்றாவது திருத்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்துவதில் மஹிந்தவின் அரசு இதயசுத்தியுடன் ஈடுபடுமா அல்லது முன்னர் வரதராஜப்பெருமாள் தலைமையிலான வடக்கு - கிழக்கு மாகாணசபை செயற்பட்ட காலத்திலேயே அதற்கு உரிய அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்காமல் இழுத்தடித்தமை போன்று கொழும்பு நிர்வாகம் நடந்துகொள்ளுமா என்பதை இந்தியா ஊன்றிக் கவனிக்கத் தயாராகக் காத்திருக்கின்றது என்ற தகவலும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தெரியப்படுத்தப்பட்டதாக அறியவந்தது. (உ)

## 5 வருடங்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2002 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடந்த இச்சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட 17 இராணுவத்தினரும் கடந்த ஐந்து வருடங்களுக்குக் கூடுதலாக அநுராதபுரம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி பி. சுவர்ணராஜ் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கை விசாரணை செய்த நீதிபதி பிரஸ்தாப படையினரை தலா ஒரு லட்சம் ரூபா காசுப் பிணையிலும் ஒரு ஆள் பிணையிலும் செல்ல அனுமதி வழங்கினார். (அ-1)


மானிப்பாயில்..........!!!
AutoCAD
Specially for Engineering Students!!
(Civil, Architectural, Mechanical & Surveying)
- வகுப்புக்கள் ஆரம்பம் 13/02/2008 & Weekend Batch -
Certificate in Internet e – mail (10hrs - Online Class)
(வெளிநாடுகளில் இருக்கும் உறவினர்களுடன் Internet மூலம் தொடர்பை ஏற்படுத்துதல் போன்ற பல பயிற்சிகளை உள்ளடக்கியது)
- வகுப்புக்கள் ஆரம்பம் 13/02/2008 & Weekend Batch -
மேலதிக விபரங்களுக்கு :-
UNI
UNI TECHNOLOGY
ICT Education Trainers
Manipay T.P:- 060 - 221 - 6433
(மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.02.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org